## இணைப்பு 1

## தமிழ்நாடு பாடத்திட்ட வரைவு - 2017

### தமிழ்

**முன்னுரை**

*'பழையன கழிதலும் புதியன புகுதலும்*
*வழுவல கால வகையினானே '*

காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப மொழியிலும் புதுமைகள் புகுத்தப்பட வேண்டும். மொழியில் ஏற்படும் மாற்றங்கள், மொழிப்பாட நூல்களிலும் வகுப்பறைகளிலும் எதிரொலிக்க வேண்டும்.

உலகில் வாழும் ஒவ்வொருவரும் தாம் வாழும் சமூகத்தினையும் பண்பாட்டினையும் அறிந்துகொண்டு வாழ்வது இன்றியமையாதது. அவ்வாறு அறிந்துகொண்டு வாழ்வதற்குக் கருவியாக மொழி விளங்குகிறது. மனிதர்கள் தங்களது எண்ணத்தையும் கருத்தையும் வெளிப்படுத்தி, பிறருடன் கருத்துத் தொடர்பு கொள்ள மொழியை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர். சமூகவாழ்வு தொடர்ந்து நடைபெற வேண்டுமானால், கருத்துத் தொடர்பு மிகவும் தேவையானதொன்றாகும். மொழி இன்றேல், மக்கள் சமூகமாக இயங்க இயலாது. எனவே, அனைவரையும் ஒன்றுபடுத்துவதற்கு மொழி ஒரு பாலமாக விளங்குகிறது.

எந்த ஒரு மொழியும் சமூகத்தால்தான் வளர்ச்சியுறும். எந்த ஒரு சமூகமும் மொழியால்தான் மேம்படும். பல்வேறு வகையான கொள்கைகள், சமயங்கள், பொருளாதார ஏற்றஇறக்கங்கள், தொழில்கள் ஆகியவற்றால் வேறுபட்டிருப்பினும், தாம் பேசும் மொழியால் அனைவரும் ஒன்றுபட்டு விளங்குகின்றனர். இத்தகைய சிறப்புவாய்ந்த மொழிப்பாடம் கலைத்திட்டத்தில் முதலிடம் பெறுவது வியப்பிற்குரியதன்று.

**தமிழ்மொழி**

நந்தம் தமிழ் மொழி, பல்லாயிரமாண்டுப் பழமையுடையது. இலக்கிய, இலக்கண வளங்கள் நிரம்பப் பெற்றது. காலந்தோறும் வளர்ந்துவரினும், இளமைமாறாத் தன்மை கொண்டது. முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குவது. பாட்டும் தொகையும் பெற்று விளங்கிய தமிழ், இன்று பன்முகத் தமிழாய், புத்துலகின் பயன்பாட்டிற்கும் ஏற்ற தமிழாய் மிளிர்கின்றது.

நம் முன்னோர் தமிழுக்கு எண்ணற்ற இலக்கியக் கொடைகளை வழங்கியுள்ளனர். இளமையிலிருந்தே மாணவர்களுக்கு இவ்விலக்கியங்களின் சுவையை அறிமுகப்படுத்தி இலக்கிய நயமுணரச் செய்துவிட்டால் அவர்கள் தாமாகவே பிற இலக்கியங்களைத் தேடிக் கற்கும் ஆர்வத்தைப் பெறுவர். அவ்வாறு கற்கும் இலக்கியங்கள் வாயிலாக நமது மொழி, இலக்கிய, பண்பாட்டு செழுமையைத் தெளிவாக அறிந்துகொள்வர்.

மொழியாளுமைத் திறனையும் இலக்கியச் சுவையுணர் ஆற்றலையும் வளர்ப்பது தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் இன்றியமையா இலக்காகும்.

**தமிழ் இலக்கிய வளம்**

புறநானூறு முதலான சங்க இலக்கியங்கள் வாயிலாகப் பண்டைத்தமிழரின் வீரம், கொடைச்சிறப்பு, படைமாட்சி, வாழ்க்கைமுறை, ஆட்சிமுறை, சமய நிலைகள், கலைகள் ஆகியனவற்றை அறிய முடிகின்றது. இலக்கிய ஆசிரியர்களின் படைப்புகள் யாவும் 'தொட்டனைத்தூறும் மணற்கேணி போல்' பயிலுந்தோறும் புதுப்புது பொருள்களைச் சுரந்து இன்பமூட்டும் ஊற்றுகளாகும். இவற்றைக் கற்கக் கற்க, கற்பனையாற்றலும் முருகுணர்ச்சியும் பெருகும். இலக்கியம் வாழ்க்கையின் கண்ணாடி! ஒரு மொழியின் இலக்கியம் என்பது அம்மொழி பேசும் மக்களின் வாழ்க்கையே!

**மொழியும் நடைமுறைப் பயன்பாடும்**

அன்றாட வாழ்க்கையில் மொழி பயன்படாத துறைகளே இல்லை. மொழியைக் கற்கும் மாணவர்கள், மொழிவாயிலாக எளிய பொருள் குறித்துத் தெளிவாகப் பேசவும், ஒரு பொருளைப்பற்றிக் கேட்கவும், கேட்டுப் பொருளுணரவும், தெளிவான முறையில் படிக்கவும், படித்துப் பொருளுணரவும், எழுதவுமான திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும். தொடக்க நிலையிலிருந்தே இத்தகைய திறன்களைக் கையாள்பவர்கள், சமூகச் செயல்பாடுகளில் வெற்றி காண்பர். மக்களாட்சி நிலவும் நம் நாட்டில், ஒரு சிறந்த குடிமகனாக விளங்குவதற்குத் தெளிவான சிந்தனை, தெளிவான பேச்சு, தெளிவான எழுத்து ஆகிய திறன்கள் இன்றியமையாது வேண்டப்படுவனவாகும்.

மொழி வெறும் தகவல் பரிமாற்றக் கருவி மட்டுமன்று. அமைப்பு, அழகியல், இலக்கியம், சமூகம், பண்பாடு, உளவியல் கூறுகளைப் போன்ற பன்முகத் தன்மைகளை உள்ளடக்கியது. இவற்றை ஆய்ந்தறிய வேண்டியது இன்றியமையாதது.

**தமிழ்ப் பாடத்திட்டம்** - 2017

தேசியக் கலைத்திட்டம் - 2005 வழங்கியுள்ள வழிகாட்டும் நெறிமுறைகளையும், இந்திய மொழிகள் கற்பித்தலுக்கான நிலைப்பாட்டுத்தாள் குறிப்பிட்டுள்ள 'மொழியின் பரிமாணத்தை முழுமையாக நோக்கவேண்டும்' என்ற கருத்தினையும் தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் – புதுதில்லி வரையறுத்துள்ள மொழிப்பாடங்களுக்கான கற்றல் வெளிப்பாடுகளையும் உள்ளடக்கியதாகவும் சிங்கப்பூர், இலங்கை போன்ற பிறநாடுகளின் தமிழ் மொழிக்கான பாடத்திட்டங்களும் கேரளா போன்ற அண்டை மாநிலங்களின் தமிழ் மொழிக்கான பாடத்திட்டங்களும் ஒப்பாய்வு செய்யப்பட்டதன் அடிப்படையிலும் தமிழ்நாட்டு, தமிழ்ப் பாடத்திட்டம் - 2017 வடிவமைக்கப்பட்டுள்ளது.

**தேசியக் கலைத்திட்டம் (NCF-2005) வழிகாட்டும் நெறிமுறைகள்**

- பள்ளிக்கு வெளியில் உள்ள வாழ்க்கையுடன் அறிவைத் தொடர்புபடுத்துதல்.
- கற்றல், மனப்பாடம் செய்யும் முறைகளிலிருந்து மாறி வருகிறது என்பதை உறுதிபடுத்துதல்.
- பாடப்புத்தகத்தை மையப்படுத்தாமல், குழந்தைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மையப்படுத்துதல்.
- தேர்வுமுறைகளை நெகிழ்வுடையதாக்கி ஒருங்கிணைந்த வகையில் வாழ்வோடு இணைத்தல்.
- நாட்டின் சனநாயகப் பன்முகத் தன்மைக்குள் புறந்தள்ளாமல் தனித்துவத்தை வளர்த்தல்

**தொடக்கநிலை** (1-5 வகுப்புகள்)

குழந்தைகள், அவரவர் வாழ்க்கைச் சூழலுக்குட்பட்டுத் தமது தாய்மொழியில் பேசுதல், பிறர் கூறுவதைப் புரிந்துகொள்ளுதல்., சிறு சிறு சொற்களை இணைத்துத் தொடர் அமைத்தல் போன்ற அடிப்படை அறிவுடன்தான் பள்ளிக்கு வருகின்றனர். மொழியைப் பற்றிய அடிப்படைப்புரிதலும், அவற்றை உரிய இடங்களில் சரியாகப் பயன்படுத்தும் திறமையும் அவர்களிடம் உள்ளன. குழந்தைகளிடம் காணப்படும் இத்தகு மொழிப்புதையலைக் கற்றலுக்கான அடிப்படையாக ஏற்றுக்கொள்வதோடு தொடக்கநிலை மொழித்திறன்களைப் படிப்படியாக ஒருங்கிணைத்துச் செழுமைப்படுத்தி வளர்த்தெடுக்கும் செயல்பாட்டை உறுதிசெய்தலே மொழிக்கல்வியின் முதற்படியாகும்.

**பாடப்பொருள்**

தமிழ், தமிழர் வாழ்வியல், பண்பாட்டியல் கருத்துகளை மொழிப்பாட மையமாக அமைத்தல். தமிழ், தமிழர் வாழ்வு, தமிழ் மரபு, தமிழ்ப்பண்பாடு, தமிழ் அறிஞர்கள், தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், தமிழ்நாட்டு வெற்றியாளர்கள், உலகறிந்த தமிழர்கள், நாட்டார் வழக்காறுகள், நாட்டுப்புறப் பாடல்கள் இவை சார்ந்த கருத்துகள் பாடமாக இடம்பெறும். நாள்தோறும் சந்திக்கும் சமுதாயச் சிக்கல்கள், பெண் முன்னேற்றம், தமிழகத்தில் பெண்விடுதலை, மகளிர் முன்னேற்றச் செயல்கள், பால் பாகுபாடுகளைக் களைதலில் பங்காற்றியவர்கள், தலைமையேற்றவர்கள், இவர்களால் காலந்தோறும் நிகழ்ந்த மாற்றங்கள், நல்லிணக்கக் கருத்துகள், வாழ்க்கையைச் சிறப்புடனும் வெற்றியுடனும் வாழத் தூண்டும் செய்திகள் ஆகியவை பாடப்பொருளாக இடம்பெறும். மொழியறிவின்வழியே வளர்க்கப்படும் தேடல், பண்பாட்டுப் பரிமாற்றங்களுக்கான வேர்களைக் கண்டடையும் ஊக்கத்தைத் தரும். தமிழர்தம் வாழ்வுடன் பிறமொழி பேசும் மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளையும், அவர்களுடன் நல்லிணக்கம் பேண வேண்டியதன் இன்றியமையாமையையும் குறித்த கருத்துகள் அமையும். எவ்விதச் சார்புகளுமற்ற தன்மையுடன் பாடப்பொருள் வடிவமைக்கப்படும்.

தமிழ் இலக்கணம் பயன்பாட்டு அடிப்படையில் அறிமுகம் செய்யப்படும். இலக்கணத்தைச் சுமையாகவும் புரியாத ஒன்றாகவும் கருதும் மனநிலையிலிருந்து குழந்தைகளை விடுவித்து, ஆர்வத்துடன் கற்கும் செயலாக இலக்கணம் கற்றல் மாற்றப்படும்.

படம், கதை, பாடல், செய்யுள், உரையாடல், சொற்போர், கடிதம், நாடகம், கட்டுரை ஆகிய வடிவங்களில், குழந்தைகள் விரும்பும் வகையிலும், அவர்களின் கருத்தைக் கவரும் வகையிலும் பாடப்பொருள் உருவாக்கப்படும்.

பெற்ற மொழியறிவை நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி அறியும் திறனை வளர்க்கும் வகையிலும், மரபு சார்ந்த பாடப்பொருள்களைக் கற்பிக்கும்பொழுது, எது சரி, தவறு என்று அவற்றை அறிவியல் கண்ணோட்டத்துடனும் திறனாய்வு நோக்குடனும் அணுகும் ஆற்றலை மாணவர்களிடம் மேம்படுத்தும் வகையிலும் பாடப்பொருள் உருவாக்கப்படும்.

கணினி வாயிலாகக் கற்பதற்கான வாய்ப்புகளுடன் கணினித் தமிழைக் கற்கும் வகையிலும் பாடப்பொருள் அமைந்திருக்கும்.

குழந்தைகளின் எண்ணம், ஆர்வம், விருப்பம், ஆளுமை ஆகியவற்றை வளர்க்கும் வகையில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள், பதின்மப் (மெட்ரிக்) பள்ளிகள், ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள், கீழ்த்திசைப் (ஓரியண்டல்) பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் அனைத்துவகைப் பள்ளி மாணவர்களுக்கும் ஏற்ற வகையில் வயதிற்கேற்ற, வகுப்புநிலைக்கேற்ற மொழித்திறன்களைப் பெறும் நோக்கில் இப்புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்தின் வாயிலாக, தொடக்கநிலை வகுப்புகளை நிறைவு செய்யும் மாணவர் தம் தாய்மொழி (அ) முதல் மொழியில் கவனத்துடன் கேட்டுப் புரிந்து கொள்ளவும், பிழையின்றிப் பேசவும் படிக்கவும் எழுதவும் எண்ணங்களை இயல்பாக வெளிப்படுத்தவும் என உரிய வகையில் மொழியை ஆளும் திறன் பெறுவர். பத்தாம் வகுப்பை நிறைவுசெய்யும் மாணவர் மொழியின் இனிமையையும் சிறப்பையும் உணர்ந்து சுவைக்கவும் ஆளவும் படைக்கவும் திறன் பெற்றிருப்பர். இந்த மொழிப்பயன்பாடு, தாய்மொழி கற்றல் கற்பித்தலுடன் மட்டும் நின்றுவிடாமல் பிற பாடங்களான அறிவியல், சமூக அறிவியல், கணக்கு உள்ளிட்டவற்றுடன் இணைத்துக் கற்பிக்கும் வகையிலும் அப்பாடங்களைக் கற்பதற்கான அடிப்படை மொழிக்கூறுகளை மொழிப்பாடம் வழங்கும் வகையிலும் அமைந்திருக்கும். மாற்றுத்திறனுடையோர், கற்றலில் பின்தங்கியுள்ளோர் ஆகியோருக்கும் ஊக்கமூட்டித் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் பாட நூல் அமைந்திருக்கும்.

**தமிழ்ப் பாடத்திட்டத்தின் சிறப்புக் கூறுகள்**

- தாம் கேட்கும் செய்திகளை உள்வாங்கிக்கொண்டு செயல்படுதல், கேட்ட, படித்த செய்திகளின் மையக்கருத்தைப் புரிந்து கொள்ளல், சிந்தித்துப் பேசுதல், கருத்துத் தொடர்புடன் எழுதுதல் ஆகிய அடிப்படைத் திறன்களைப் பெறப் பாடத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- உயர்நிலை மொழியாற்றல்களான மையக்கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடையளித்தல், குறிப்பெடுத்தல், பகுத்தல், தொகுத்தல், வகைப்படுத்துதல், விவரித்தல், வெளிப்படுத்துதல், இதழ் தயாரித்தல், நாட்குறிப்பு எழுதுதல் ஆகியவற்றை வளர்க்கும் வகையிலும் அமைந்துள்ளது.
- நாள்தோறும் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்களைச் சந்திக்கும் வகையில் படிவங்கள் நிரப்புதலுக்கும், விண்ணப்பங்கள் எழுதுதலுக்கும் பாடத்திட்டத்தில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- குழந்தைகள் மொழி வாயிலாகக் கற்பனைத் திறனை மேம்படுத்தவும் தாமே கற்கவும் நடைமுறை இலக்கணத்தைப் புரிந்து பயன்படுத்தவும் பாடத்திட்டம் வழிவகுத்துள்ளது.
- படைப்புத்திறன்களான கதை, பாடல், கட்டுரை, உரையாடல், நாடகம் ஆகியவற்றை உருவாக்கும் திறன்களை வளர்ப்பதாய் அமைந்துள்ளது.
- மொழியில் மேற்கொள்ள வேண்டிய செயல்திட்டங்களும் பாடத்திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**நோக்கங்கள்**

பாடப்புத்தகங்களில் காணப்படும் பாடப்பொருளை அறிவாகக் கருதாமல், கற்றல் கற்பித்தல் வழியாகவும் சுய அனுபவப் பகிர்வுகளாலும் ஏற்பட்ட கட்டுமானத்தை அறிவாகக் கருத, இப்பாடத்திட்டம் வழிவகை செய்யும்.

- குழந்தைகளை மையப்படுத்தியதாக அமைக்கப்பட்டுள்ளது.
- குழந்தைகளின் இயல்புகளையும் எல்லைகளையும் ஏற்று மதிப்பளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- மாணவர்களை வெற்றுப் பாத்திரமாகக் கருதும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது,
- மாணவரின் உடல்திறம், உணர்வு நலம், செயல்திறன் போன்றவற்றை வளர்ப்பதாக அமைக்கப்பட்டுள்ளது.
- சிந்திப்பதற்கும் படைப்பூக்கத்திற்கும் வாய்ப்பளிக்கும் வகையிலும் உள்ளது.
- இன்றைய நடைமுறைக்குப் பொருத்தமாகவும் நாளைய தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- செய்திகளை அறிவாக உருமாற்றம் செய்ய வழிகாட்டுவதாக உள்ளது.
- நெகிழ்ச்சித் தன்மையுடையதாக, சமத்துவச் சூழலுக்கேற்றதாக அமைக்கப்பட்டுள்ளது.
- குழந்தைகளின் கற்றல்சுமையையும் மனஅழுத்தத்தையும் குறைக்கும் நோக்கில் பொருளுணர்ந்து, தாமே செய்துபார்த்து, கருத்தாடல் நடத்தி, உற்றுநோக்கி, உரையாடி, சிந்தித்து, கண்டறிந்து வெளிப்படுத்த வாய்ப்புகளை வழங்குவதாக உருவாக்கப்பட்டுள்ளது.
- பல்வேறு துறைகளைப் பற்றி அறிந்துகொள்ள அடிப்படையாகவும் பல்வேறு பாடங்களை இணைத்துக் கற்பிக்கும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.
- குழந்தைகள் பட்டறிவு வாயிலாகச் சமூகநீதி, சமத்துவம், சமயச்சார்பின்மை முதலான மதிப்புகளைச் செழுமைப்படுத்தும் நோக்கில் சிறந்த நல்லியல்புகள், சமூகப் பண்புகள், மனிதநேயம், சகிப்புத்தன்மை, வாழ்வியல் திறன்கள் ஆகியவற்றை வளர்ப்பதன் வாயிலாக இணக்கத்துடன் வாழ்வதற்கும் சவால்களையும் சிக்கல்களையும் எதிர்கொள்வதற்குத் தேவையான ஆற்றலை வலுப்பெற செய்வதாகவும் உள்ளது.

**கற்றல் அணுகுமுறைகள்**

பாடத்திட்டம், குழந்தை மைய அணுகுமுறையை வலியுறுத்துகிறது. விளையாட்டு முறை, கதைகூறல் முறை, நடித்துக் காட்டல் முறை, குழுக்கற்றல் முறை, பங்கேற்றுக் கற்றல் முறை போன்ற கற்றல் கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி மகிழ்வுடன் கற்கும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

**மதிப்பீடு**

மாணவர்களை அச்சம், சோர்வுக்கு உள்ளாக்குவதாக இல்லாமல் அவர்கள் நடைமுறையில் எதிர்கொள்ளும் மனஅழுத்தத்தைக் குறைக்கும் வகையிலும் ஊக்கம் பெற்றுக் கற்றுக்கொள்ள உதவும் வகையிலும் மதிப்பீடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

- மொழித்திறன்களை மதிப்பிடுவதாகவும், மொழி வாயிலாகக் கற்றுக் கொண்டவற்றை மதிப்பிடுவதாகவும், அமைந்திருக்கும்.
- ஏற்கெனவே அறிந்ததிலிருந்து புதியனவற்றிற்கு விடை காணக்கூடியதாகவும் மதிப்பீட்டுச் செயல்கள் அமைந்திருக்கும்.
- மதிப்பீட்டுச் செயல்கள் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருக்கும்.

- தாங்களாகவே கற்றுணரும் தன்மையைப் பெறும்வகையிலும், சுயமாகச் சிந்திக்கும் திறனைப் பெறும்வகையிலும் அமைந்திருக்கும்.
- கற்றுக்கொண்ட திறன்களை மேலும் வளர்ப்பதாகவும் அமைந்திருக்கும்.
- பாடப்பொருள் அனைத்தையும் படித்திருக்கிறாரா என்று சோதிப்பதைவிட, மொழிப் புலமை பெற்றிருக்கிறாரா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் மதிப்பீடு வடிவமைக்கப்படும்.
- தொடக்க வகுப்புகளில் மொழியின் அடிப்படைத் திறன்களையும் உயர் வகுப்புகளில், மொழி ஆளுமைத் திறன்களையும் பெறும் வகையில் அமைந்திருக்கும்.

தமிழ்நாட்டில் தற்போது ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை நடைமுறையில் உள்ளது. வாய்மொழி மதிப்பீடு, எழுத்துவழி மதிப்பீடு, செயல்வழி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொடர் மதிப்பீட்டின் சிறப்புத்தன்மை மாணவர்களின் கற்றலை, தொடர்ந்து உற்றுநோக்கி அறிந்ததன் அடிப்படையில் மாணவர்களின் கற்றலில் ஏற்படும் குறைகளை நீக்கி, கற்றல் மேம்பாட்டிற்கு உதவுவதாகும். கல்விச் செயல்கள் மட்டும் அல்லாது கல்வி இணைச் செயல்களும் முழுமையாக மதிப்பிடப்படுகின்றன. இம்மதிப்பீட்டு முறை மேலும் செம்மையாக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளது.

**தொடக்க நிலை**

**மொழிப்பாடவழி வளர்க்கப்பட வேண்டிய திறன்கள்**

1. கேட்டல்
2. பேசுதல்
3. படித்தல்
4. எழுதுதல்
5. நடைமுறை இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்
6. கற்கக் கற்கும் திறன்கள் ( தானே கற்றல்)
7. சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறன்களும்
8. படைப்புத் திறன்கள்
9. விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுதல்
10. வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுதல்

போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

## பாடத்திட்டம்

### தொடக்க வகுப்புகள் (1-5)

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 1. கேட்டல் | • அறிமுகமான சொற்களமைந்த, எளிய, ஓசை நயமிக்க பாடல்களைக் கவனத்துடன் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் / சுவைத்தல். | • படங்கள்/ ஓவியங்கள் கதைப்படங்களை நுட்பமுடன் உற்று நோக்கல்/ சுவைத்தல்.<br>• எளிய, கேட்டறியாத சொற்களமைந்த பாடல்களைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல். | • பாடல்களையும், கதைகளையும் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல். அவற்றின் மீதான கருத்தினை/ நோக்கினை வெளிப்படுத்துதல். | • ஓசைநயமும் கருத்தும் மிக்க பாடல்கள், புதிர்க் கதைகளைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல். எளிய உரைகளைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | • விழிப்புணர்வுப் பாடல்கள், சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல். |
| | • எளிய படக்கதைகளைப் கவனத்துடன் பார்த்தும் சொல்லக் கேட்டும் புரிந்து கொள்ளுதல்/ சுவைத்தல். | • எளிய கதைகளைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல். | • தம்மைச்சுற்றி நடைபெறும் உரையாடல்களையும் விவரிப்புகளையும் கேட்டுப் புரிந்து கொள்ளுதல். | • சூழ்நிலையில் தாம் உற்றுக்கேட்ட பல்வேறு விவரங்களைப் புரிந்து கொண்டு வெளிப்படுத்துதல். | • நாடகம், வசனங்கள் உரைகள் முதலியவற்றைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல். |
| | • எளிய கட்டளைகள், அறிவுரைகளைக் கேட்டுப் புரிந்து கொண்டு அதற்கேற்பச் செயல்படுதல் . | • வாய்மொழி வேண்டு கோள் களையும் அறிவுரைகளையும் கட்டளைகளையும் வினாக்களையும் கேட்டுப் புரிந்து கொள்ளுதல்/ எதிர்வினையாற்றுதல். | • வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல். | • தொடர் வாய்மொழிக் கூற்றுகளையும் விடுகதைகளையும் கேட்டுப் புரிந்து கொள்ளுதல். | • சொற்போர், கலந்துரையாடல் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல். |
| | • ஒத்த வயதினரின் உரையாடல்களையும் எளிய தகவல்களையும் கேட்டுப் புரிந்து கொள்ளுதல். | • பிறர் பேசுவதைப் பொறுப்புடனும் கவனத்துடனும் கேட்டுப் புரிந்துகொள்ளுதல். | • வானொலி தொலைக்காட்சி செய்திகளைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல். | • பிறர் கூறுவதைக் கவனமுடன் கேட்டல் / வினாக்கள் எழுப்புதல் அவற்றின் மீதான தங்கள் கருத்துகளை/ எதிர் வினைகளை வெளிப்படுத்துதல், | எளிய செயல்திட்டங்களைக் கேட்டுப் புரிந்து செயல்படுதல். |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 2. பேசுதல் | • தன் பெயர், குடும்பத்தினர் பெயர், ஊர்ப்பெயர், நண்பர்களின் பெயர்களைக் கூறுதல். | • ஓசைநயமிக்க பாடல்களைத் தனியாளாகவும் குழுவாகவும் உரிய ஒலிப்புடன் பாடுதல். | • அறிந்த, கேட்ட கதைகள், தகவல்களைக் கலவைத் தொடரில் பேசுதல். | • தங்குதடையின்றி இயல்பாகத் தொடர்ந்து பேசுதல்.<br>• எளிய வருணனைச் சொற்களைக் கலந்து பேசுதல்.<br>• தெளிவாகப் பொருள் விளங்க ஒப்பித்தல். | • பல்வேறு பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுதல்.<br>• அறிந்த, எளிய தலைப்புகளில் இயல்பாகவும் சரளமாகவும் பேசுதல். |
| | • எளிய, சந்தநயமுள்ள பாடல்களை உடல் அசைவுகளுடன் குழுவாகவும், தனியாகவும் பாடுதல்/ஒப்பித்தல்.<br>• பாடல், கதை, படக்கதை ஆகியவற்றை இனங்காணுதல். | • படக் கதையைப் பார்த்து நிகழ்வைக் கூறுதல்.<br>• செய்தி திரட்டும் பொருட்டு வினா எழுப்புதல்.<br>• பார்த்த/ கேட்டவற்றைப் பற்றிப் பேசுதல். | • பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுதல்.<br>• கேட்டுணர்ந்த கதை, கதைப்பாடல்களின் தலைப்புகள், கதாமாந்தர்கள் பற்றி வினாக்கள் கேட்டல், கருத்தாடல் செய்து கருத்துகளை வெளிப்படுத்துதல். | • கதைகள், பாடல்களைத் தங்கள் சொந்த நடையில், தாம் விரும்பும் வகையில் தம் கருத்துகளையும் இணைத்துச் சொல்லுதல்.<br>• விடுகதைகளுக்கு விடை கூறுதல். | • கேட்ட, படித்த பகுதியின் மையக்கருத்தினைக் கூறுதல்.<br>• கேட்ட, படித்த பல்வேறு இலக்கியங்கள் பற்றிப் பேசுதல், விவாதித்தல், பகுப்பாய்வு செய்தல். |
| | • படத்தைப் பார்த்து அதுகுறித்து உரையாடுதல், கதை கூறுதல்.<br>• விவரங்கள் அறிய வினா எழுப்புதல்.<br>• கேட்டறிந்தவற்றைப் பேச்சில் வெளிப்படுத்துதல். | • கேட்ட/ படித்த பாடல், கதைகளிலிருந்து கேட்கப்படும் எளிய வினாக்களுக்கு முழுமையான சொற்றொடரில் விடை கூறுதல். | • தமக்கு அறிமுகமான, செய்திகளையும் விவரங்களையும் சரியான ஒலிப்புடனும், தங்குதடையின்றியும் விவரித்துக் கூறுதல். | • பல்வேறு படைப்புகளின் தலைப்புகள், சூழல், கதைமாந்தர்கள் குறித்துப் பேசுதல், தனிப்பட்ட கருத்துகளை வெளிப்படுத்துதல். | • தன்னைச்சுற்றி நிகழும் பல்வேறு நிகழ்வுகளுக்கு எதிர்வினை புரிதல்.<br>• சூழ்நிலைகளையும் நிகழ்வுகளையும் விவரித்தல். |
| | • தம்முடைய எண்ணங்களையும் தேவைகளையும் பேச்சில் வெளிப்படுத்துதல்/ அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல். | • சொற்கள், தொடர்களை முறையாகவும் சரியாகவும் ஒலித்தல்.<br>• கேட்ட கதை, பாடல்களைத் தம் கற்பனையின் அடிப்படையில் கூறுதல்/ தனக்கான நடையில் | • கேட்கும்/ படிக்கும் கதை, கவிதை/ செய்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துதல். | • எளிய வகுப்பறைக் கருத்தாடல், கலந்துரையாடலில் பங்கேற்றல். | • படித்த, கேட்ட கருத்துகள் பற்றிக் கருத்தாடல் செய்யவும் வினாக்கள் எழுப்பவும் தம் கருத்துக்கு/ நோக்கத்திற்கு ஆதரவாகவும் விளக்கமளித்தல். |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| | | பேசுதல். | | | |
| | • ஒத்த வயதினருடன், ஆசிரியர்களுடன் தன்னைச் சுற்றியுள்ளவை பற்றி உரையாடுதல். | • கேட்டவற்றுடன் தம் அனுபவங்களைத் தொடர்புபடுத்திப் பொருள் விளங்கும் வகையில் தெளிவாக வெளிப்படுத்துதல்/<br>• வினா எழுப்புதல். | • பண்புடன் உரையாடுதல். | தேசிய மாநில அளவிலான, சமூக, உணர்வுபூர்வமான செய்திகளை இனங்கண்டு அவற்றின் மீது கருத்தாடல் செய்தல். | • நாடகங்கள், சொற்போர் முதலான நிகழ்வுகளில் பங்கேற்றுப் பேசுதல்.<br>• மொழியின் நுட்பமான கூறுகளை மனத்திற்கொண்டு தங்களுக்கேயுரிய மொழிநடையைக் கட்டமைத்தல். |
| 3. படித்தல் | **படிப்பதற்கான ஆயத்தச் செயல்கள்**<br>• படங்களை நுட்பமாக உற்று நோக்குதல். அளவு, வண்ணம், வடிவம் ஆகியவற்றிற்கிடையே உள்ள ஒப்புமை, வேற்றுமைகளை அறிதல். | • தமிழ் மொழியின் அனைத்து உச்சரிப்புகளையும் அறிந்து பயன்படுத்துதல். | • தெளிவான ஒலிப்புடன் குறில் - நெடில், மயங்கொலிப் பிழைகளின்றிப் படித்தல். | • சிறு சிறு உரைப்பகுதிகளை நிறுத்தக்குறிகளுக்கு ஏற்பப் படித்தல். | • செய்தி, நிகழ்ச்சி அறிவிப்புகள், நிகழ்ச்சி நிரல், அழைப்பிதழ்கள், துண்டறிக்கை/ வெளியீடுகளை படித்துப் பொருளுணர்தல். |
| | • படங்களை இடமிருந்து வலம் நோக்கிப் பார்த்துப் பெயர் சொல்லுதல்<br>• அச்சிடப்பட்ட பகுதிகளை உற்று நோக்கி, அப்பகுதி வெளிப்படுத்தும் கருத்தை அனுமானம் செய்தல். | • சொற்களின் ஒலி வடிவ, வரி வடிவ தொடர்புகளை இனங்காணல் | • எளிய தொடர்களைத் தங்குதடையின்றிப் படித்தல். | • சிறு சிறு கதைகள், பாடல்களை உரிய ஒலிப்புடன் பொருள் விளங்கப் படித்தல். | • கதை, உரையாடல், நாடகம், கடிதம் ஆகியவற்றை உரிய உணர்ச்சியுடனும், குரல் ஏற்ற இறக்கத்துடனும் பொருள் விளங்குமாறு படித்தல். |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| | • தமிழ் எழுத்துகளை இனங்கண்டு (ஒலி வடிவ, வரி வடிவத் தொடர்புகளை அறிந்து) முறையான ஒலிப்புடன் படிக்க அறிதல்.<br>(உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள், உயிர்மெய் எழுத்துகள், ஆய்த எழுத்து என்ற வரிசையில் எழுத்துகளுக்கிடையேயான ஒலி வடிவ, வரி வடிவத் தொடர்புகளை அறிதல்) | • எளிய சொற்கள், சிறு சிறு தொடர்களை உரிய ஒலிப்புடன் படித்தல். | • முற்றுப் புள்ளி, வினாக் குறி ஆகிய நிறுத்தக்குறியீடுகளை அறிந்து படித்தல். | • படிக்கும் பகுதியில் இடம்பெறும் பழமொழிகள், மரபுச் சொற்களை அறிதல். | • உரைப்பகுதிகளைப் படித்து அதிலிருந்து கேட்கப்படும் பல்வேறு வகையான வினாக்களுக்கு விடையளித்தல். |
| | • எழுத்துகளைத் தனியாகவும் சொற்களிலும் அடையாளம் காணுதல்.<br>• வடமொழி ஒலிப்புகளுக்குரிய கிரந்த வரி வடிவங்களை அறிது படித்தல் | • எளிய சந்தப் பாடல்களை இசையுடன் படித்தல். | • மூன்று (அ) நான்கு தொடர்களைக் கொண்ட சிறுசிறு உரைப்பகுதிகளைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல். | • செய்தித்தாள்கள், சுவரொட்டிகள், அறிவிப்புகள், விளம்பரங்கள் ஆகியவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளுதல் | • எளிய பட விளக்கங்கள், எண் விவர அறிவிப்புகள், வரைபடங்கள் ஆகியவற்றைப் படித்து, பொருள் உணர்தல். |
| | • நான்கு எழுத்துகளுக்கு மிகாத சொற்களைச் சேர்த்துப் படித்தல்.<br>• சிறு சிறு தொடர்களைப் படித்தல். | • எளிமையான சிறுசிறு படக்கதைகளை / பாடல்களைப் படித்தல். | • சூழல் சார்ந்து, புதிய சொற்களின் பொருள் புரிந்து படித்தல். | • படித்து உணர்ந்தவற்றோடு தங்கள் அனுபவங்களையும் தொடர்புபடுத்துதல். | • சொற்களின் பொருண்மையை அகரமுதலிகளில் கண்டறிதல். |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| | • குறில் - நெடில், மயங்கொலிப் பிழைகளின்றிப் படித்தல்.<br>• ஒலிகள், சொற்கள் கொண்டு விளையாடி மகிழ்தல். | • படிக்கும் பகுதியின் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளித்தல். | • படிக்கும் பகுதியில் இடம்பெறும் புதிய சொற்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொண்டு பிறகு அவற்றின் சரியான பொருளை அறிந்து கொள்ள முயலுதல். | • உரைப்பகுதிகளைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல்.<br>• தாங்கள் விரும்பும் நூல்களைத் தெரிந்தெடுத்துப் படிக்க ஆர்வம் கொள்ளுதல். | • செய்தித்தாள்கள், கதை நூல்கள் ஆகியவற்றைப் படித்தல். |
| | • எளிய சிறுசிறு சொற்களடங்கிய படக்கதைகளைப் படித்தல்.<br>• எழுதப்பட்ட/ அச்சடித்த சிறு பகுதியைப் படித்தல். | • விரும்பும் நூல்களைத் தேடிப் படித்தல்.<br>• படித்த பகுதியில் கேட்கப்படும் சிறு சிறு வினாக்களுக்கு விடையளித்தல். | • படிக்கும் பகுதியில் இடம்பெறும் பெயர்ச் சொல், வினைச் சொல், பதிலிப் பெயர்ச்சொல் போன்ற நுட்பங்களைப் புரிந்துகொள்ள இயலுதல். | • ஒரே பொருண்மையுள்ள பல்வேறு சொற்களுக்கு இடையிலான நுட்பமான வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்துதல். | • .பல்வேறு துறை சார்ந்த சொற்களைப் புரிந்துகொண்டு பொருத்தமான இடங்களில் பயன்படுத்துதல். |
| 4. எழுதுதல் | **முன் ஆயத்தப் பயிற்சி**<br>• தன் விருப்பம்போல் கிறுக்குதல்.<br>• நேர்க்கோடு, வளைகோடு, சாய்கோடுகளை வரைதல்<br>• புள்ளிகளை இணைத்து நேர்க்கோடுகள், வளைகோடுகள் வரைதல். | • படங்களைப் பார்த்துப் பெயர்கள், சிறுசிறு தொடர்கள் (தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும்) எழுதுதல். | • உரிய வடிவத்தில், முறையான இடைவெளியிட்டு எழுதுதல். | • உரைப்பகுதியை உரிய நிறுத்தக்குறிகளுடன் எழுதுதல். | • உரைநடை / துணைப்பாடங்களில் இடம்பெறும் இன்றியமையாச் சிக்கல்களை எழுத்து வடிவில் வெளிப்படுத்துதல். |
| | • உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து, வடமொழி எழுத்து இவற்றின் ஒலி வடிவ, வரி வடிவத் தொடர்பு அறிதல்.<br>• சொல்லிக்கொண்டே வரியொற்றி எழுதுதல். | • சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுதல். | • செய்தி/ உரைப்பகுதி / கதை / இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து , கருத்து தெரிவித்தல், கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுதல். | • எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு உரைப் பகுதிகளைத் தமக்கான நடையில் எழுதுதல்<br>• பொருத்தமான நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தி எழுதுதல் | • உரை/ உரைப்பகுதியைச் / சொல்லக் கேட்டு உரிய நிறுத்தக்குறிகளுடன் எழுதுதல்.<br>- செய்யுள், பாடல்களை அடிபிறழாமல் எழுதுதல். |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| | • சொற்களையும் சிறு சிறு தொடர்களையும் பார்த்து உச்சரித்துக்கொண்டே எழுதுதல். | • எளிய பாடல், கதை, உரைப்பகுதியிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு முழுமையான தொடர்களில் விடையளித்தல். | • புதிர்கள், துணுக்குகளுக்கு விடை எழுதுதல். | • திருக்குறள், செய்யுள் பகுதிகளை அடி பிறழாமல் எழுதுதல். | • சுற்றுப்புறத்தில் நடக்கும் நிகழ்வுகளை உற்று நோக்கி, அவைசார்ந்த தமது கருத்துகளை எழுத்தில் பதிவு செய்தல்.<br>- நாட்குறிப்பு எழுதுதல்<br>- நிகழ்வுகளை விவரித்து எழுதுதல். |
| | • இரண்டு அல்லது மூன்று எழுத்துச் சொற்களைச் சொல்லக் கேட்டு, குறில் – நெடில், மயங்கொலிப் பிழையின்றி எழுதுதல். | • சிறு சிறு தொடர்களைத் தம்முடைய நடையில் எழுதுதல்<br>• கேட்டவற்றை/ படித்தவற்றை / சிந்தித்து உணர்ந்தவற்றைப் படங்களாகவோ, சொற்களாகவோ, தொடர்களாகவோ வெளிப்படுத்துதல். | • அறிந்த சொற்களைக் கொண்டு, தமக்கான நடையில், நிறுத்தக் குறியீடுகள், எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு தொடர்கள் எழுதுதல். | **பல்வேறு நோக்கங்களுக்கேற்ப / சூழல்களுக்கேற்ப எழுதுதல்**<br>• உறவு முறைக் கடிதம் எழுதுதல்.<br>• சிறுசிறு கட்டுரை எழுதுதல்.<br>• புதிய பொருண்மைகளை உணர்ந்து தம் சொற்களில் (பேச்சில் / எழுத்தில்) பயன்படுத்துதல்.<br>• கற்பனையாகக் கதை எழுதுதல்.<br>• எழுதியவற்றைத் தாமே மதிப்பீடு செய்தல். | • பல்வேறு சூழல்களுக்கேற்ப எழுதும்போது, மொழியின் இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு, பொருத்தமான சொற்கள், தொடர்கள், பழமொழிகள், நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தி, கவனமாக எழுதுதல்.<br>• கற்பனையின் அடிப்படையில் கதைகள், பாடல்கள், கவிதைகள், கடிதங்கள் எழுதுதல்.<br>- விண்ணப்பக் கடிதம் எழுதுதல்.<br>- குறிப்புச் சட்டகத்தைப் பயன்படுத்தி, கட்டுரை எழுதுதல். |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 5. நடைமுறை இலக்கணம் | • ஒத்த ஓசையில் முடியும் சொற்களை இனங்காணல். | • ஒலி இயைபுச் சொற்களை உருவாக்குதல்<br>• ஒருமை, பன்மை (கள், க்கள், ங்கள்) சேர்த்து எழுத அறிதல் | • இன எழுத்துகளை அறிதல்<br>• வல்லினம், மெல்லினம், இடையினம் எழுத்துகளை அறிதல் (பெட்டிச்செய்தி)<br>• ஒருமை, பன்மை வேறுபாடு அறிதல் ( அது - அவை) | • ஐம்பால் வகையறிதல் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் அறிதல்.<br>• உரிய இணைப்புச் சொற்களைப் பொருத்தமான இடங்களில் சேர்த்து எழுதுதல். (ஆனால், எனவே.....) | • சொற்றொடர் அமைப்புமுறை (எழுவாய், செயப்படுபொருள், பயனிலை) அறிதல். |
| | • குறில் நெடில் எழுத்துகளின் ஒலியளவு வேறுபாடு (மாத்திரை) அறிந்து பயன் படுத்துதல். | • பெயர்ச்சொற்கள், பதிலிப் பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் அறிதல். | • இரு திணை அறிதல். (உயர்திணை, அஃறிணை) | • காலம் (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் அறிதல்<br>- எழுவாய்,<br>- பயனிலை -அறிமுகம்<br>• பெயர்ப்பயனிலை,<br>* எ.கா. அவள் கவிதா<br>• வினைப் பயனிலை,<br>* எ.கா, அவன் படித்தான்<br>• வினாப் பயனிலை.<br>* எ.கா அவன் யார்? | • மூவிடம் அறிதல் (தன்மை, முன்னிலை, படர்க்கை )<br>• உரிய இணைப்புச் சொற்களைப் பொருத்தமான இடங்களில் சேர்த்து எழுதுதல். (ஏனெனில், அப்படியானால், அப்படியில்லாவிட்டால்) |
| 6. கற்கக் கற்றல் | • படத்தொகுப்பைப் பார்த்து உரையாடுதல்.<br>• கணினியில் சித்திரக் கதைகள், பாடல்கள் கேட்டு மகிழ்தல், திரும்பப் பாடுதல். | • படக் கதைகளைப் பார்த்தறிந்து / படித்தறிந்து கதை கூறுதல்.<br>• கணினியில் எளிய மொழி விளையாட்டுகளை விளையாடி மகிழ்தல். | • சிறுவர்களுக்கான படவிளக்க அகரமுதலியைப் பயன்படுத்துதல்.<br>• கணினியில் குழந்தைகளுக்கான புதிர்கள், மொழி விளையாட்டுகள் விளையாடி மகிழ்தல். | • குழந்தைகளுக்கான எளிய அகரமுதலிகளைப் பயன்படுத்த அறிதல்.<br>• கணினியில் உரைகள், வசனங்கள், முழக்கத்தொடர்கள் கேட்டல்.<br>• தகவல்கள், சொற்பொருள் தேடி அறிதல் | • எளிய அகரமுதலியைப் பயன்படுத்துதல்.<br>• செய்தித்தாள்கள், கதை நூல்கள் படித்தல்.<br>• கணினியைப் பயன்படுத்தி நாடகங்கள், சொற்போர், உரைகள் கேட்டல். |
| | • சிறுவர்களுக்கான கதை, படக்கதை, படத்தொகுப்பு நூல்களைப் பார்த்தும் படித்தும் மகிழ்தல் . | • பெயர்ப் பலகைகள், சிறுவர்களுக்கான பெரிய எழுத்து சித்திரக் கதைகள் படித்தல். | • படக்கதைகளைத் தேடிப் படித்தல் | • கதை நூல்கள் படித்தல். | • இணையத்தில் தேடிப் படித்தல். |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 7. சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறனும் | **கீழ்க்காணும் சொற்களைக் கேட்டும் படித்தும் அறிந்து, அவற்றைப் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்**<br>• விலங்குகளின் பெயர்கள்<br>• பறவைகளின் பெயர்கள்<br>• வாகனங்களின் பெயர்கள்<br>• நிறங்களின் பெயர்கள்<br>• சுவைகளின் பெயர்கள்<br>• கிழமைகளின் பெயர்கள்<br>• தமிழ் மாதங்களின் பெயர்கள்<br>• எண்ணுப் பெயர்கள்<br>• உறவுமுறைகளின் பெயர்கள்<br>• திசைகளின்பெயர்கள்<br>• வடிவங்களின் பெயர்கள் | **கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்**<br>• பெயர்ச்சொற்கள்<br>• வினைச்சொற்கள்<br>• எதிர்ச்சொற்கள்<br>• இரட்டைச் சொற்கள் (பள பள, மடமட...)<br>• எளிய வருணனைச் சொற்கள்<br>• ஆங்கில மாதங்களின் பெயர்கள்<br>• வீடு, பள்ளிகளிலுள்ள பொருள்களின் பெயர்கள்<br>• குடும்ப உறுப்பினர் பெயர்கள்<br>• காய்கள், பழங்களின் பெயர்கள்<br>• தின்பண்டங்களின் பெயர்கள் | **கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்**<br>• உணவுப் பொருள்களின் பெயர்கள்<br>• ஆடை வகைகளின் பெயர்கள்<br>• அணிகலன்களின் பெயர்கள்<br>• மரம்,செடி, கொடிகளின் பெயர்கள்<br>• பொது இடங்களின் பெயர்கள்(பள்ளி, வங்கி, பேருந்து நிலையம், மருத்துவ மனை...)<br>• தன் ஊர், மாவட்டம், மாநிலம், நாடு ஆகியவற்றின் பெயர்கள்<br>• இன்றியமையா ஆளுமைகளின் பெயர்கள்(நாட்டின் பிரதமர்,குடியரசுத் தலைவர், முதலமைச்சர், ஆளுநர், கல்வி அமைச்சர்...)<br>• பழமொழிகள்<br>• மரபுத் தொடர்கள்<br>• **சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காகப் படித்தல்**<br>• சிறுவர்களுக்கான பெரிய எழுத்து படக்கதைகள் | **கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்**<br>• தொழிலாளர், தொழில்கள் பெயர்கள்<br>• சிறப்பு வாய்ந்த நகரங்கள், ஊர்களின் பெயர்கள்<br>• இன்றியமையா இடங்களின் பெயர்கள் (இந்திய மாநிலங்கள், தமிழ்நாட்டின் மாவட்டங்கள்) பழமொழிகள்<br>• மரபுத் தொடர்கள்<br>• கணினி இணைய கலைச்சொற்கள்<br>• **சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காகப் படித்தல்**<br>சிறுவர்களுக்கான கதைகள், பாடல்கள் | **கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்**<br>• பழமொழிகள் மரபுத் தொடர்கள்<br>• நேரிணை (உயர்ந்தோங்கிய) எதிரிணைச் (ஏற்ற இறக்கம்) சொற்களைப் பயன்படுத்துதல்<br>• பிற நாடுகள், உலகத் தலைவர்கள், இன்றியமையா இடங்களின் பெயர்கள்<br>• ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள்<br>• பலதுறை சார்ந்த கலைச் சொற்கள்<br>• அறிவியல் கலைச் சொற்கள்<br>**சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காகப் படித்தல்**<br>• சிறுவர்களுக்கான இலக்கியங்கள் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 8. படைப்புத் திறன்கள் | • ஒத்த ஓசையுடைய சொற்களை உருவாக்குதல்<br>• ஒருமையைப் பன்மையாகவும் பன்மையை ஒருமையாகவும் மாற்றுதல்<br>• கொடுக்கப்பட்ட எழுத்துகளிலிருந்து சொற்களை உருவாக்குதல் | • முதல் எழுத்தை மாற்றி வேறு சொல் உருவாக்குதல்<br>• குறிப்பிட்ட எழுத்தில் தொடங்கும் பல்வேறு சொற்களை எழுதுதல்<br>• கொடுக்கப்பட்ட சொல்லிலிருந்து பல்வேறு சொற்களை உருவாக்குதல்<br>• சொல்லின் இறுதி எழுத்தித் தொடங்கும் சொல்லைத் (அந்தாதி) எழுதுதல்.<br>• பாடலின் வரிகளைத் தொடர்ந்து பாடி முடித்தல்<br>(காகம் கா கா<br>கிளி, கீ கீ<br>குயில், கூ கூ<br>............ ............<br>............ ............<br>.............. ............ )<br>• கதையின் முடிவை விருப்பம் போல மாற்றிக் கூறுதல் | • சொல் விளையாட்டுகளில் பங்கேற்றல்<br>• ஒரே சொல்லில் தொடங்கும், முடியும் பல்வேறு சொற்களை உருவாக்குதல்<br>• கதையைத் தொடர்ந்து கூறி முடித்தல்<br>(ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு<br>.........<br>.....................<br>.....................) | • விளம்பரங்கள் உருவாக்குதல்<br>• அறிவிப்புகள், நிகழ்ச்சி நிரல் உருவாக்குதல்<br>• குறுந்தகவல்கள், நகைச்சுவைத் துணுக்குகள் உருவாக்குதல்<br>• பாடலின் வரிகளை மாற்றிப் பாடுதல்<br>• கற்பனைக் கடிதம் எழுதுதல் | • குறிப்புகளைக் கொண்டு கதைகளை உருவாக்குதல்<br>• பாதிக்கதையைத் தொடர்ந்து மீதிக் கதையைக் கூறி முடித்தல்<br>• பாடல் அடிகளை நீட்டிக் கொண்டே செல்லுதல்<br>• நிகழ்ச்சியைச் செய்தியாக்குதல்<br>• தலைப்புச் செய்தியை விரித்து எழுதுதல்<br>• விளம்பரங்கள், அறிவிப்புகள், முழக்கத் தொடர்கள் உருவாக்குதல்<br>• குறிப்பிட்ட தலைப்பில் கதை, கவிதை, உரை எழுதித் தயாரித்தல்/படித்துக்காட்டல் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 9. விழுமியங்களை உணர்ந்து பின்பற்றும் திறன் | • நேரந்தவறாமை<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பொருள்களைப் பாதுகாத்தல் | • நேரந்தவறாமை<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பொருள்களைப் பாதுகாத்தல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>• கூட்டுணர்வு | • நேரந்தவறாமை<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பொருள்களைப் பாதுகாத்தல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>• கூட்டுணர்வு<br>• நட்புணர்வு<br>• உண்மை பேசுதல்<br>• சேமிப்பு உணர்வு | • நேரந்தவறாமை<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பொருள்களைப் பாதுகாத்தல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>• கூட்டுணர்வு<br>• நட்புணர்வு<br>• உண்மை பேசுதல்<br>• சேமிப்பு உணர்வு<br>• சிக்கனம்<br>• நேர்மை<br>• நன்றியுணர்வு<br>• தன்னம்பிக்கை | • நேரந்தவறாமை<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பொருள்களைப் பாதுகாத்தல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>• கூட்டுணர்வு<br>• நட்புணர்வு<br>• உண்மை பேசுதல்<br>• சேமிப்பு உணர்வு<br>• சிக்கனம்<br>• நேர்மை<br>• நன்றியுணர்வு<br>• தன்னம்பிக்கை<br>• ஒற்றுமை<br>• விட்டுக் கொடுத்தல்<br>• நாட்டுப்பற்று<br>• விடாமுயற்சி<br>• மொழிப்பற்று<br>• உழைப்பு<br>• அறிவியல் மனப்பான்மை<br>• இயற்கையை நேசித்தல்<br>• சகோதரத்துவம் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 10.. வாழ்வியல் தேர்ச்சிக்கான திறன்களை அறிதல் | • தன்னை அறியும் திறன்<br>• சிக்கல் தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்புத் திறன்<br>• இணக்கமான உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் | • தன்னை அறியும் திறன்<br>• சிக்கல் தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்புத் திறன்<br>• இணக்கமான உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் | • தன்னை அறியும் திறன்<br>• சிக்கல் தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்புத் திறன்<br>• இணக்கமான உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் | • தன்னை அறியும் திறன்<br>• சிக்கல் தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்புத் திறன்<br>• இணக்கமான உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் | • தன்னை அறியும் திறன்<br>• சிக்கல் தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்புத் திறன்<br>• இணக்கமான உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் |

**உயர் தொடக்க நிலை (6 - 8 வகுப்புகள்)**

**மொழிப்பாடவழி வளர்க்கப்பட வேண்டிய திறன்கள்**

**1. அடிப்படை மொழித்திறன்கள்**

- **கேட்டல்** : செய்யுளையும் உரை வடிவங்களையும் சொல்லக் கேட்டுப் / படிக்கக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல், புரிந்துகொண்டவற்றை வெளிப்படுத்துதல்.
- **பேசுதல்** : கேட்டவற்றின் பொருளுணர்ந்து பேச்சில் வெளிப்படுத்துதல். அவையில் அச்சம் கூச்சமின்றிப் பேசுதல். கேட்ட / படித்த செய்திகளின் மீது வினாக்கள் எழுப்புதல். வினாக்கள் எழுப்புவதன் வாயிலாகப் புதியவற்றை அறிந்து, புரிதலை மேம்படுத்திக் கொள்ளுதல். அனுபவங்களைச் சொந்த நடையில் பேசுதல்./கருத்தாடல்.
- **படித்தல்** : செய்யுள், உரைநடை முதலான பல்வேறு வடிவங்களையும் படித்தல். பொருளுணர்வுக்கு ஏற்றாற்போல் உரிய ஒலிப்பு, குரல் ஏற்ற இறக்கம், நிறுத்தக் குறிகளுடன் உணர்ச்சி வெளிப்பட, படித்துக்காட்டுதல். படித்த பகுதியின் பொருளுணர்ந்து பதிலளித்தல். படித்த பகுதியின் மொழி நடையை இனங்காணல். வாய்க்குள் படித்தல் – வாய்விட்டுப் படித்தல், ஆழ்ந்து படித்தல், அகன்று படித்தல்.
- **எழுதுதல்** : செய்யுள், உரைநடைவழி கேட்டும், படித்தும் அறிந்தவற்றைத் தம் சொந்த நடையில் எழுதுதல். பல்வேறு சூழல்கள், நிகழ்வுகளின்போது பிறர் கூறியவற்றையும், தாம் பெற்ற அனுபவங்களையும் சொந்த நடையில் எழுதுதல்.

**2. மொழிவழித் தகவலறி திறன்கள்**

- செய்யுள், உரை வடிவத்தின் மையக்கருத்து அறியும் திறன்.
- செய்யுளின் / உரைநடையின் பொருள் அறியும் திறன்.
- செய்யுள், உரைநடை ஆகியவற்றில் இடம்பெறும் அருஞ்சொற்கள், புதிய சொற்களின் பொருள் அறியும் திறன்.
- சொற்களுக்குரிய பொருளறிய அகராதியைப் பயன்படுத்தும் திறன்.
- . படிக்கும் பகுதியை நுட்பமாக ஆய்ந்து சிறப்புக் கூறுகளைக் கண்டறியும் திறன்.
- செய்யுளின் நயம் உணர்ந்து போற்றும் திறன் (ஒலிநயம், சொல்நயம், பொருள் நயம்)
- படிக்கும் பகுதியில் இடம்பெறும் சொலவடைகள், செறிவான சொற்கள் / தொடர்களைக் கண்டறிந்து பொருள் உணர்ந்து போற்றும் திறன்.
- செய்யுள் உணர்த்தும் அறக்கருத்துகள்/நீதி /நன்னெறி ஆகியவற்றை உணர்ந்து பின்பற்றும் திறன்
- வருணனை, கற்பனை போன்றவற்றைப் புரிந்துகொள்ளும் திறன்.
- தொடர்புடைய கூடுதல் செய்திகளைப் பார்வை நூல்கள், அகரமுதலி, கலைக்களஞ்சியம், தேசப்படப் புத்தகம் மற்றும் இணைய தளம் ஆகியவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்தி தொகுத்தறியும் திறன்.
    - ஆசிரியர் வரலாறு
    - நூல் வரலாறு
    - செய்யுள் தோன்றியதற்கான பின்புலம்
    - பாடப்பட்ட காலம், சூழல்

- செய்யுள் நடை
- அதே புலவரின் வேறு செய்யுள் (அ) அதே கருத்தமைந்த வேறு செய்யுள்கள், வேறு புலவர்களின் செய்யுள், உரைகளைத் தேடிக் கற்கும் திறன்.
- கேட்டல் / படித்தல் வழியாகச் சொற்களஞ்சியம் பெருக்கும் திறன்.

**3. தொடர்பாடல் திறன்கள் (Communication skills)**

- செய்யுளின் மையக்கருத்தைக் கூறுதல், எழுதுதல்.
- கேட்ட, படித்த பகுதியைப் புரிந்து, முன்னறிவுடன் இணைத்து உரையாடும் திறன்.
- கேட்ட, படித்த பகுதியைப் புரிந்து, முன்னறிவுடன் இணைத்து எழுதும் திறன்.

**4. சொற்களஞ்சியப் பெருக்கம் / மொழியாளுமைத் திறன்கள்**

- பேச்சிலும் எழுத்திலும் ஏற்புடைய சொற்களைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல்.
- பேச்சிலும் எழுத்திலும் ஏற்புடைய பழமொழி, உவமை, மரபுத் தொடர் ஆகியவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல்.
- பிறமொழிக் கலப்பின்றிப் பேசுதல் / எழுதுதல் / திறன்
- ஊடகங்களில் பார்த்த, கேட்ட, படித்த செய்திகளைச் சொந்த நடையில் பேசும் / எழுதும் திறன்.
- உரிய ஒலிப்புடன், உரிய உணர்ச்சி வெளிப்பட, பொருளுணர்வுக்கு ஏற்றாற்போல் குரல் ஏற்ற இறக்கத்துடன் இலக்கிய வடிவங்களைப் படித்தல் / ஒப்புவித்தல்.
- சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல், அறிந்த சொற்களைப் பேச்சிலும் எழுத்திலும் கையாளுதல்.
- படித்த, கற்ற பகுதிகளின் பொருண்மையைப் புரிந்து உரையாடலில், எழுத்தில் வெளிப்படுத்துதல்.
- பார்த்த ஓவியம், காட்சிகளின் அனுபவத்தைச் சொந்த சொற்களில் வெளிப்படுத்துதல்.
- உரிய ஒலிப்புடனும், உரிய உணர்ச்சி வெளிப்படவும், பொருளுணர்வுக்கு ஏற்றாற்போல் குரல் ஏற்ற இறக்கத்துடனும் தங்குதடையின்றியும், இயல்பாக, சொந்த நடையில் பேசுதல்.
- பொதுத் தமிழில், எழுத்துவழக்குச் சொற்களைப் பயன்படுத்தியும் சந்திப் பிழை, மயங்கொலிப் பிழை, குறில்/நெடில் பிழை, தொடர்ப் பிழை போன்ற பிழைகளின்றியும் உரிய நிறுத்தக் குறிகளுடன், படிப்பவர் தெளிவாகப் பொருள் உணரும்படி சொந்த நடையில் எழுதுதல்.
- மொழியின் நுட்பங்களை அறிந்து பேசுதல்/ எழுதுதல்.
- பேச்சு / எழுத்தின் நோக்கம், கேட்பவர்/ படிப்பவரின் நிலை ஆகியவற்றை மனத்திற்கொண்டு பயன் விளையுமாறு தன்னை வெளிப்படுத்துதல்.
- சொந்த அனுபவங்களை நாள்குறிப்பு, கடிதம், கட்டுரை ... போன்ற வடிவங்களில் எழுதுதல்.
- பல்வேறு சூழலில் கேட்ட/ படித்த பல கலைகள் /பல துறைகள்/பல தொழில்கள் சார்ந்த கலைச் சொற்களை அறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்.
- சரியான சொல், தொடர், சொற்றொடர்களைப் பயன்படுத்திப் பேசுதல் /எழுதுதல்
- வகுப்பறை, பள்ளிச்சுவரொட்டிகளில் எழுத செய்திகள் சேகரித்தல், முத்திரைத் தொடர்கள் உருவாக்குதல், தொகுத்தல்.

**எளிய தலைப்புகளில் பேசும் திறன்**

**எ.கா.**

- உரையாடுதல்
- உரையாற்றுதல்
- கலந்துரையாடுதல்
- கருத்தாடல் நிகழ்த்துதல்
- அறிக்கை வாசித்தல்
- தொகுத்துரைத்தல்
- செய்யுள், உரை நயங்களை எடுத்துக் கூறுதல்
- வாய்மொழியில் தெளிவாக விண்ணப்பித்தல்
- நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல்
- நிகழ்ச்சி வருணனை கூறுதல்
- நேர்காணல் நடத்துதல்
- நகைச்சுவைத் துணுக்குகள் கூறுதல்
- இலக்கியநயம் தோன்றப் பேசுதல்.
- செய்திகள், கருத்துகள், நூல்கள் குறித்துக் கருத்துரைத்தல்.

**எளிய தலைப்புகளில் எழுதும் திறன்**

**எ.கா.**

- உரையாடல்
- உரை
- கலந்துரையாடல்
- கருத்தாடல்
- அறிக்கை
- கட்டுரை
- நகைச்சுவைத் துணுக்குகள் எழுதுதல்
- செய்யுள், உரை நயங்களை விவரித்து எழுதுதல்.
- இலக்கிய நயம் தோன்ற எழுதுதல்.
- எழுத்து மொழியில் தெளிவாக விண்ணப்பித்தல் (விண்ணப்பங்கள் நிரப்புதல் / எழுதுதல்)

**5. வாழ்வியல் மாட்சிமைக்கான திறன்களையும் (விழுமியங்கள் ) தேர்ச்சிக்கான திறன்களையும் (வாழ்வியல் திறன்கள்) அறிந்து பின்பற்றுதல்**

**விழுமியங்கள் :**

- செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணப் பகுதிகள்வழி அறிந்த தமிழ் மொழியின் இனிமை, சிறப்பு, பெருமை, தொன்மை, அருமை, சமுதாய நோக்கு, நல்லிணக்கம் போன்றவற்றை அறிந்து போற்றும் திறன்
- பலவகைப்பட்ட மக்களின் மொழி, உணவுமுறை, வாழ்க்கை முறை, மரபு, பண்பாடு அறிதல்/ மதித்தல்.
- செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணப் பகுதிகள்வழி நன்னெறிகளை உணர்ந்தறிந்து பின்பற்றுதல்

**வாழ்வியல் திறன்கள்**

மொழி கற்றல் வழியாக வாழ்வியல் தேர்ச்சித் திறன்களைப் பெறுதல்.

- தன்னை அறியும் திறன்
- பிரச்சனை தீர்க்கும் திறன்
- முடிவெடுக்கும் திறன்
- கூர்சிந்தனைத் திறன்
- படைப்பாக்கச் சிந்தனைத் திறன்
- சிறந்த தகவல் தொடர்புத் திறன்
- சுமுக உறவுக்கான திறன்கள்
- பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்
- உணர்வுகளைக் கையாளும் திறன்
- மன அழுத்தத்தைக் கையாளும் திறன்

**6. படைப்புத் திறன்கள்**

- பாடல், கவிதைகளை நீட்டிச் சொல்லுதல்
- சிந்தனை / கற்பனை வாயிலாக மனத்தில் உருவகித்துத் தனது பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படுத்துதல்
- மொழிப்பாடவழி அறிந்த கருத்துகளுக்கு, உரைநடை, கதை, நாடகம் என்று மறு வடிவம் கொடுத்தல்.
- சிறு சிறு பாடல், கவிதை, கதை ஆகியவற்றைப் படைக்கும் திறன்.
- பல்வேறு வெளிப்பாட்டு உத்திகளையும் முறைகளையும் இனங்கண்டு படைப்புகளில் பயன்படுத்துதல்.

**7. திறனாய்வுத் திறன்கள்**

- கற்றறிந்த பாடலுடன் ஒத்த கருத்துள்ள பிறபாடல் (அ) இலக்கியத்துடன் ஒப்பிடும் திறன்
- மொழிப்பாடவழி அறிந்தனவற்றைத் திறனாய்வு செய்யும் திறன்.
- படித்த கருத்து சார்ந்து தன்னுடைய விருப்பு வெறுப்பு, உடன்படல், மறுத்தல், போன்றவற்றை நுட்பமாக ஆய்வுசெய்து வெளிப்படுத்தும் திறன்.
- உணர்ச்சிகரமான வெவ்வேறுவகை பாடப்பொருள் /சிக்கல்களைக் காரணகாரிய அடிப்படையில் ஆராய்ந்து கருத்துகளை வெளிப்படுத்தும் திறன்.
- இயற்கை சார்ந்த (அ) சிக்கல்கள் தொடர்பாக ஆராய்ந்தறிந்து முடிவுக்கு வருதல்.
- கேட்ட / பார்த்த உள்ளூர், சமூக நிகழ்வுகள் செயல்பாடுகள், சடங்குகள் பற்றி வினா எழுப்புதல்/ கருத்தாடல்.

**8. மொழிபெயர்ப்புத் திறன்கள்**

- பாடப் பகுதியில் / வழக்கத்தில் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை அறிந்து, பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்.

- சொற்கள், தொடர்கள், உரைப்பகுதிகளைச் சொந்தமாக மொழிபெயர்த்தல்.

**9. சொல்லாக்கத் திறன்கள்**

- காலத்தின் தேவைகளுக்கேற்பப் புதிய புதிய சொல்லாக்கங்களை உருவாக்க முயலுதல்.

**10. புத்துலகிற்கான திறன்கள் (இதழியல், ஊடகம், கணினி, இணையம்சார் மொழித்திறன்கள்)**

- செய்தி, விளம்பரம், அறிவிப்பு, நிகழ்ச்சித் தொகுப்பு போன்றவற்றைக் கூறும் திறன் / உருவாக்கும் திறன்.
- கணினி வாயிலாக, மொழிசார் வளங்களைத் தேடிக் கற்கும் திறன்
- நோக்கங்களுக்கேற்பச் செய்திகள் திரட்டுதல், உருவாக்குதல், தொகுத்தல் திறன்கள்
- செய்தி, விளம்பரம், அறிவிப்பு போன்றவற்றை த் தமிழில் தட்டச்சு செய்யும் திறன்.
- கையெழுத்து இதழ், ஆண்டு மலர் போன்றவற்றில் தம் படைப்புகளை வெளியிடும் திறன்.
- தம்முடைய படைப்புகளை இணையத்தில் பதிவேற்றம் செய்யும் திறன்.

மேற்குறிப்பிட்ட திறன்களைக் கீழ்க்காணும் பொருண்மைசார் பாடப்பகுதிகளின் வாயிலாக, உயர் தொடக்க நிலை மாணவர்களிடம் வளர்த்தெடுக்க வேண்டும்.

**உயர்தொடக்க நிலை - பாட நூல் அமைப்பு முறை**

**பாடநூல் பகுப்பு** - முப்பருவ முறை

**பொருண்மைகள்** - பொருண்மைகளின் அடிப்படையில் பாடப்பொருள் வடிவமைக்கப்படும்.

**மாதிரிப் பொருண்மைகள்**

1. மொழி
2. நாடு / சமூகம்
3. அரசு / நிருவாகம்
4. இயற்கை / வேளாண்மை / சுற்றுச்சூழல்
5. தொழில் / வணிகம்
6. கலை / கல்வி
7. நாகரிகம் / பண்பாடு
8. அறிவியல் / தொழில்நுட்பம்
9. அறம், தத்துவம், சிந்தனை
10. மனிதம் / ஆளுமை
11. அமைப்பியல் / அழகியல் / புதுவகை

**இயல்** -- ஒரு பருவத்துக்கு 3 இயல் என மூன்று பருவத்துக்கு மொத்தம் 9 இயல்கள் அமைக்கப்படும்

**இயல் அமைப்பு** - ஒவ்வோர் இயலிலும் பொருண்மை சார்ந்த செய்யுள், உரைநடை, துணைப்பாடம் மற்றும் இலக்கணம், மொழிப்பயிற்சிகள் ஆகியன அடங்கும்.

**கற்றல் வெளிப்பாடுகள்** - செய்யுள், உரைநடை, துணைப்பாடம் மற்றும் இலக்கணம், மொழிப்பயிற்சிகள் ஆகியவற்றின் வாயிலாக, பெறும் கற்றல் வெளிப்பாடுகள் மொழித்திறன்சார் வெளிப்பாடுகள், பொருண்மைசார் வெளிப்பாடுகள் என்னும் இரு வகைகளில் அமையும்.

**இலக்கணம்**

| ஆறாம் வகுப்பு | ஏழாம் வகுப்பு | எட்டாம் வகுப்பு |
|---|---|---|
| 1. **எழுத்து - வகை, தொகை, மாத்திரை** | 1. **சார்பெழுத்து - குற்றியலுகரம்** | 1. **சார்பெழுத்துகள்** |
| **உயிர் எழுத்துகள்** | 2. **பகுபதம், பகாப்பதம்** | குற்றியலிகரம் முதல் |
| உயிர்க் குறில், | • ஓரெழுத்து ஒரு மொழி | ஆய்தக்குறுக்கம் வரை விரிவாக |
| உயிர் நெடில் | 3. **மூவகைப்போலி** | **பெட்டிச் செய்தி** |
| **மெய்யெழுத்துகள்** | 4. **தொழிற்பெயர் – வினையாலணையும்** | (தொல்காப்பியர் கூறிய |
| • வல்லினம் | **பெயர்** | சார்பெழுத்து) |
| • மெல்லினம் | 5. **தொழிற்பெயர் ஆக்க விகுதிகள்** | 2. **ஆகுபெயர் - அறிமுகம்** |
| • இடையினம் | 6. **சொல் - இலக்கிய வகை** | (பொருள், இடம், காலம், சினை, |
| **உயிர்மெய்** | (இயல், திரி, திசை, வட சொற்கள்) | குணம், தொழில்) |
| • உயிர்மெய்க் குறில், | 7. **வினைமுற்று** – | 3. **வழக்கு - இயல்பு, தகுதி** |
| • உயிர் மெய் நெடில் | • குறிப்பு, தெரிநிலை | 4. **வேற்றுமை - விளக்கம்,** |
| 2. **மொழி முதல், இடை, கடையெழுத்துகள்** | • ஏவல் - வியங்கோள் | வேற்றுமை உருபுகள், |
| 3. **மயங்கொலி எழுத்துகள்** | 8. **எச்சம்** | வேற்றுமை வகைகள் |
| 4. **இனஎழுத்துகள்** | • பெயரெச்சம் | **வேற்றுமைத்தொகை** - |
| 5. **சுட்டெழுத்துகள் ,** | • வினையெச்சம் | (தொகைநிலை, தொகாநிலை - |
| • **வினா எழுத்துகள்** | 9. **அணி** | உடன்தொக்கதொகை அறிமுகம்) |
| 6. **சார்பெழுத்து வகைகள்** | • உருவக அணி | 5. **வல்லினம் மிகும் இடம்,** |
| (உயிர்மெய், ஆய்தம் மட்டும் விரிவாக) | • ஏகதேச உருவக அணி | **வல்லினம் மிகா இடம் - அறிமுகம்** |
| 7 **இலக்கணவகைச் சொற்கள்** | • தற்குறிப்பேற்ற அணி | 6. **புணர்ச்சி - அறிமுகம்** |
| (பெயர், வினை, இடை, உரி) | | இயல்பு, விகாரம் |
| 8. **பெயர்ச்சொல்லின் வகைகள்** | | 7. **யாப்பு- உறுப்புகள் அறிமுகம்** |
| (பொருள், இடம், காலம், சினை, | | ( எழுத்து, அசை,சீர், அடி ஆகிய |
| குணம், தொழில்) | | நான்கு மட்டும் விரிவாக) |
| • இடுகுறிப்பெயர், | | 8. **பா வகைகள் - அறிமுகம்** |
| • காரணப்பெயர் | | 9. **அணி** |
| 9. **அணி - தன்மை அணி** | | • பிறிதுமொழிதல் அணி |
| • இயல்பு நவிற்சியணி | | • இரட்டுற மொழிதல் அணி |
| • உயர்வு நவிற்சியணி | | |

**மொழித்திறன் பயிற்சிகள்**

| **பேசுதல் திறன்**<br><br>(உரிய ஒலிப்புடன், உரிய உணர்ச்சி வெளிப்பட, பொருளுணர்வுக்கு ஏற்றாற்போல் குரல், ஏற்றஇறக்கத்துடன் தங்கு தடையின்றி, இயல்பாக, தமக்கான நடையில் பேசுதல்) | **எழுதுதல் திறன்**<br><br>(பொதுத் தமிழில், எழுத்து வழக்குச் சொற்களைப் பயன்படுத்தி, பிழைகளின்றி (சந்திப் பிழை, மயங்கொலிப் பிழை, குறில் – நெடில் பிழை, தொடர்ப் பிழை) உரிய நிறுத்தக் குறிகளுடன் தெளிவாகப் பொருள் விளங்கத் தமக்கான நடையில் எழுதுதல்) |
|---|---|
| **குறிப்பிட்ட தலைப்பில் பேசுதல்**<br>• உரையாடுதல்<br>• உரையாற்றுதல்<br>• கலந்துரையாடுதல்<br>• கருத்தாடல்<br>• அறிக்கை வாசித்தல்<br>• தொகுத்துரைத்தல்<br>• செய்யுள், உரை நயங்களை எடுத்துக் கூறும் திறன்.<br>• வாய்மொழியில் தெளிவாக விண்ணப்பித்தல் | **குறிப்பிட்ட தலைப்பில் உரை எழுதுதல்**<br>• உரையாடல்<br>• உரையாற்றல்<br>• கலந்துரையாடல்<br>• கருத்தாடல்<br>• அறிக்கை<br>• கட்டுரை<br>• செய்யுள், உரைநயங்களை எழுதும் திறன்.<br>• எழுத்துமொழியில் தெளிவாக விண்ணப்பித்தல் (விண்ணப்பங்கள் நிரப்புதல் / எழுதுதல்) |
| நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல். | நிகழ்ச்சி நிரல் தயாரித்தல். |
| அறிக்கை வாசித்தல். | அறிக்கை எழுதுதல். |
| நிகழ்ச்சி வருணனை கூறுதல். | நிகழ்வறிக்கை தயாரித்தல். |
| நேர்காணல் நடத்துதல். | முழக்கத் தொடர்கள் எழுதுதல். |
| செய்திகள், கருத்துகள், நூல்களைத் திறனாய்வு செய்தல். | செய்திகள், கருத்துகள், நூல்களைத் திறனாய்வு செய்து எழுதுதல். |

**உயர்தொடக்க வகுப்புகளுக்கான விழுமியங்கள்**

| **ஆறாம் வகுப்பு** | **ஏழாம் வகுப்பு** | **எட்டாம் வகுப்பு** |
|---|---|---|
| அன்பு | மொழியுணர்வு | பிறருக்கு உதவுதல் |
| நட்பு | நாட்டுப்பற்று | நட்புணர்வு |
| ஒற்றுமை | மனித நேயம் | கூட்டுணர்வு |
| உழைப்பு | சமத்துவம் | உண்மை பேசுதல் |
| விடாமுயற்சி | சமயசார்பின்மை | நாட்டுப்பற்று |
| தன்னம்பிக்கை | இயற்கையைக் காத்தல் | சகிப்புத் தன்மை |
| நேர்மை | பால் பாகுபாடின்மை | தன்னலமின்மை |
| வாய்மை | பொதுசொத்துகளைப் | நடுவுநிலமை |
| மொழிப்பற்று | பாதுகாத்தல் | மொழிப்பற்று |
| விதிகளைப் பின்பற்றுதல் | தேசிய சின்னங்களை மதித்தல் | |

**உயர்தொடக்க வகுப்புகளுக்கான வாழ்வியல் திறன்கள்**

| **ஆறாம் வகுப்பு, ஏழாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு** |
|---|
| • தன்னை அறியும் திறன் |
| • பிரச்சனை தீர்க்கும் திறன் |
| • முடிவெடுக்கும் திறன் |
| • கூர்சிந்தனைத் திறன் |
| • படைப்பாக்கச் சிந்தனைத் திறன் |
| • சிறந்த தகவல் தொடர்பு திறன் |
| • சுமுக உறவுக்கான திறன்கள் |
| • பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்து கொள்ளும் திறன் |
| • உணர்வுகளைக் கையாளும் திறன் |
| • மன அழுத்தத்தைக் கையாளும் திறன் |

## தமிழ் மொழிப்பாடத்திட்டம் - உயர்நிலை (வரைவு)

**மொழி மானுடத்தின் அடையாளம்**: கருத்துப் பரிமாற்றத்திற்கான ஆற்றல் வாய்ந்த ஊடகம். ஒரு சமுதாயத்தின் அறிவு, பண்பாடு, வரலாறு, தத்துவம் ஆகியவற்றோடு இரண்டறக் கலந்ததாகவும் அவற்றின் கருவூலமாகவும் மொழி விளங்குகிறது. தனி மனிதர் சிந்திக்கவும் படைப்பாக்கத் திறன் பெறவும் மொழியே அடிப்படையாக அமைகிறது.

எல்லாக் குழந்தைகளும் இயல்பூக்கம் காரணமாகத் தாம் வாழும் சூழலில் இருந்தே மொழியறிவைப் பெற்றுக்கொள்கின்றனர். ஆயினும், அதனை முறையாகத் திறம்பட வளர்த்தெடுப்பதில் கல்விக்கூடங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.

உயர்நிலைக்கான தமிழ் மொழிக்கல்வி, மாணவர்கள் தாம் வெளிப்படுத்தவிழையும் கருத்தைத் தங்குதடையின்றிப் பேசவும், அதனைப் பிழையின்றி எழுதவும் தேவையான திறன்களைப்பெறச் செய்யவேண்டும். சமூகத் தேவைகள் அனைத்திற்கும் மொழியைத் திறம்படக் கையாளும் ஆற்றலை வளர்த்தெடுக்க வேண்டும். செய்யுள் மற்றும் உரைநடையில் அமைந்த படைப்புகளை நன்கு புரிந்து கொள்ளவும். புரிந்து கொண்டவற்றைப் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படுத்தவுமான திறன்களைத் தர வேண்டும். தமிழ்மொழிப் படங்களைக் கற்கும்போது, அவற்றின் ஊடாக, மொழியின் தொன்மை, சிறப்பு, தமிழ்ச் சமூகத்தின் வரலாறு, பண்பாடு, சிந்தனைமரபு, விழுமியங்கள் போன்றவற்றையும் மாணவர்கள் பெறவேண்டும். இவற்றைக் கருத்தில் கொண்டு, உயர்கல்விக்குரிய (ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு) தமிழ் மொழிப் பாடத்திட்டம் கீழ்க்காணுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்மொழிப் பாடம் கற்பிப்பதன் முக்கிய நோக்கங்கள்**

✓ மொழியை இலகுவாகக் கையாளவும் அம்மொழிவழியே திறமையுடன் கருத்துகளை வெளிப்படுத்தவும் வழிகாட்டுதல்.

✓ மொழியைக் கற்கவும், மொழிவழிப் பிற பாடங்களைக் கற்கவும் அடித்தளம் அமைத்தளித்தல்

✓ பல்வேறு இலக்கிய இலக்கண நூலாசிரியர்களின் கருத்தின்வழி மொழியின் கட்டமைப்பைப் புரிந்துகொள்ளச் செய்தல்.

✓ தமிழில் சிந்திக்கவும், சிந்தித்தவற்றைத் தன்னம்பிக்கையுடன் தயக்கமின்றித் தமிழ்மொழி வாயிலாக வெளிப்படுத்தவும் பழக்குவித்தல்.

✓ தமிழ்மொழி என்பது தகவலுக்கான ஊடகம் மட்டுமன்று: அது பண்பாடு, வாழ்வியல், நாகரிகக் கூறுகளுடன் பின்னிப் பிணைந்த உயிர்ப்புடைய வாழ்வியல்மொழி என்பதை உணரச் செய்தல்.

✓ இன்றைய தகவல் தொழில்நுட்பம், ஊடகங்கள், அறிவியல் ஆகியவற்றின் வளர்ச்சிகளில் தமிழ்மொழி தன்னைப் புதுப்பித்துக் கொள்வதற்குரிய, கலைச்சொற்களை உருவாக்கவும் உருவாக்கப்பட்ட சொற்களஞ்சியத்தைப் பொருத்தமுறப் பயன்படுத்தவும் ஊக்குவித்தல்.

✓ தமிழ்மொழியைப் பயன்படுத்தும் போதெல்லாம் அதன் தொன்மையை உள்ளுணர்ந்து பெருமித உணர்வுடன் வெளிப்படுத்தப் பள்ளிகளிலும் வகுப்பறைகளிலும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**உயர்நிலைக் கல்வியின்வழி வளர்க்கப்படும் மொழித்திறன்கள்**

கற்றல், இலக்கு நோக்கியது. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள், திறன்கள் எனப்படுகின்றன. பள்ளிக் கற்றலின் தொடக்கநிலை 1 முதல் 5 வகுப்புகளாகவும், உயர்தொடக்க நிலை 6 முதல் 8 வகுப்புகளாகவும், உயர்நிலை 9 மற்றும் 10 வகுப்புகளாகவும், மேனிலை 11 மற்றும் 12 வகுப்புகளாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் உயர்நிலையில்,

- அடிப்படைத் திறன்கள் (கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல்)
- உயர்நிலைச் சிந்தனைத் திறன்கள்
- 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள் / தொழில்நுட்பத் திறன்கள்
- பண்பியல் திறன்கள்

- சொல்லாட்சித்திறன்
- அகராதியைப் பயன்படுத்தும் திறன்

போன்றவை கைவரப் பெற வேண்டும்.

**திறன்களின் உட்கூறுகளான,**

- உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் படித்தல், மையக்கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடையளித்தல், குறிப்பெடுத்தல், விவரித்தல்.
- மொழி ஆளுமைத்திறன், விவாதம், உரையாடல்களில் பங்கேற்று ஏற்ற இறக்கங்களுடன் பேசுதல், எழுதுதல் .
- பகுதியைப் படித்துக் கருத்துகளைப் பகுத்தும் தொகுத்தும் வகைப்படுத்தியும் வெளிப்படுத்த அறிதல்.
- புதிய சொற்கள், பிறமொழிச் சொற்கள், இணைச் சொற்கள் போன்றவற்றை அறிதல்
- கட்டுரை, கடிதம், விண்ணப்பங்களை உரிய வடிவத்திலும் நிறுத்தக்குறிகளைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தி எழுதுதல்.
- ஆழ்ந்த படிப்பின்வழிப் பாடப்பகுதிகளையும் அகன்ற படிப்பின்வழித் துணைப்பாடம் முதலிய பிற பகுதிகளையும் தானே கற்க அறிதல்.
- இலக்கியங்களின் வழியாக மொழிவழங்கும் பகுதிகள் மற்றும் சார்ந்த பகுதி மக்களின் வரலாறு, பண்பாடுகளை அறிதல்.
- மொழிவழியாகச் சித்தமருத்துவம், விளையாட்டு, இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் போன்ற பல்துறை அறிவைப் பெறுதல்.
- புதிய சொற்களின் பொருளறிதல், அகரமுதலியைப் பயன்படுத்த அறிதல், சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்.
- உரையாடல், நாடகம் அமைத்து எழுதுதல், நிகழ்ச்சி அறிவிப்புகளை நிரல்படவும் சுவைபடவும் இலக்கிய நயமுணர்ந்தும் கூறுதல், எழுதுதல்.
- மொழிநயம் அறிதல், அறிந்த மொழிநயத்தைப் பொருத்தமுறப் பயன்படுத்துதல், நயம் பாராட்டுதல் (எ.கா.-உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலபொருள் ஒரு சொல்)
- கதை, கவிதை, கட்டுரை, நாடகம், கடிதம் போன்ற படைப்புகளை உருவாக்கும் ஆற்றல் பெறுதல்.
- சிந்தனைத் திறன் கைவரப்பெறுதல்.
- மறுப்புத்திறன் அறிதல், மனித உறவுப்பாலத்தைத் தக்க வைக்க ஏற்றவாறு மொழியைப் பொருத்தமுறக் கையாளும் திறன் பெறுதல், உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதல், தன்னைப் போலப் பிறரை எண்ணுதல் போன்ற வாழ்வியல் சார்ந்த பண்பியல் கூறுகளை மொழிவழிப் பெறுதல்.

இவை போன்ற தமிழ்மொழிவழிப் பெறும் திறன்கூறுகள் மாணவர்களைச் சென்றடையக் கீழ்க்காணுமாறு பாடத்திட்டத்தில் பாடக்கூறுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்மொழி – பாடக்கூறுகளும் பாடநூல் அமைப்பும்**

1. **செய்யுள் / கவிதை**
2. **உரைநடை**
3. **இலக்கணம், மொழித்திறன்**
4. **துணைப்பாடம்**

பொருண்மைக் களங்களின் அடிப்படையில் செய்யுள்/பாடல் கவிதை ஆகியவற்றின் குறிந்தபட்சம் மூன்று வடிவங்கள் செய்யுள் பகுதியில் வைக்கப்படவுள்ளன.

கட்டுரை, கடிதம், நாடகம், உரையாடல், நேர்காணல், தன்வரலாறு, பயணக்கட்டுரை, உரை, வழக்காடு மன்றம், விமரிசனம், தலையங்கம், திறனாய்வு போன்ற வடிவங்கள் பொருண்மைக்கும் மாணவரின் கற்றல் நிலைக்கும் ஏற்றவாறு பொருத்தமுற ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் உரைநடைப் பகுதியினுள் பாடமாக வைக்கப்படவுள்ளன.

துணைப்பாடம் என்னும் பாடக்கூறு, அகன்ற படிப்பிற்குரியது. உயர்நிலை மாணவர்கள், தமிழ்மொழிப் படைப்புகளைத் தாமே தேடித் தேர்ந்து, விருப்புடன் கற்கும் வண்ணம் பாடப்பகுதிகள் இப்பகுதியில் தேர்ந்தெடுத்து வைக்கப்படும். கதை, சிறுகதை, புதினம், கடிதம், நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள், கட்டுரை வடிவங்கள் (பயணக்கட்டுரை, தன்வரலாறு, வருணனைக் கட்டுரை, விளக்கக் கட்டுரை, வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை) போன்ற பல்வேறுப்பட்ட பாடவடிவங்கள் பொருண்மைக்கு ஏற்றவகையில் துணைப்பாடங்களாக இடம்பெறவுள்ளன.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி போன்ற மரபிலக்கணப் பகுதிகள் ஆறாம் வகுப்பிலிருந்து படிப்படியாக வளர்நிலையில் வைக்கப்படும். உயர்நிலையில் மாணவரின் புரிதலுக்கு ஏற்ப, பாடப்பகுதியோடு இணைத்து விதிவருமுறையில் கற்பிக்கத் தகுந்த இலக்கணப்பகுதிகள் இடம்பெறவுள்ளன.

<u>இப்பாடக்கூறுகளைக் கற்பிப்பதால் ஏற்படும் கற்றல் விளைவுகள் பின்வருமாறு-</u>

**செய்யுள் கற்பித்தலின் நோக்கங்களும் திறன்களும்**

- ✓ கவிதை இன்பத்தை உணர்தல்
- ✓ ஓசை நயம் கூறல் (எ.கா.) எதுகை, மோனை, இயைபு, முரண்
- ✓ பொருட் சுவையறிதல்
- ✓ சொற்சுவையறிதல்
- ✓ உவமை நயம் உணர்தல்
- ✓ சிலேடை நயம் அறிதல்
- ✓ கற்பனைத் திறன் பெறுதல்
- ✓ அழகியலை அறிந்து இன்புறல்
- ✓ பாடலின் கருத்துணர்தல்
- ✓ படைப்பாற்றலைப் பெறுதல்
- ✓ செய்யுள் கற்பதை விரும்புதல்
- ✓ நாட்டுப்பற்று, மொழிப்பற்று மேம்படுதல்

**உரைநடை கற்பித்தலின் நோக்கங்களும் திறன்களும்**

- ✓ சொல் மரபை அறிதல்
- ✓ தொடர் மரபை அறிதல்
- ✓ பத்தி மரபை அறிதல்
- ✓ சொற்களஞ்சியம் பெருக்கும் வாய்ப்பைப் பெறுதல்
- ✓ சொல்லாட்சித் திறன் மேம்படல்
- ✓ தொடர்களைப் பிழையின்றிக் கூறவும் எழுதவும் செய்தல்

- ✓ நடைமுறை உரைநடை அமைப்பை அறிதல் , பயன்படுத்தல்
- ✓ மையக்கருத்துணர்தல், அதன்வழி கருத்துவளம் பெறுதல், பெற்ற வளத்தினைப் பயன்படுத்தல்
- ✓ வாய்விட்டுப் படிக்கப் பயிற்சி பெறுதல்
- ✓ வாய்க்குட் படித்தலின்வழி படித்தல் வேகத்தை அதிகரித்தல்
- ✓ சிந்தனைத்திறன் மேம்படல்
- ✓ மொழியின்மீது ஆர்வம் மிகுதல்

**இலக்கணம் கற்பித்தலின் நோக்கங்களும் திறன்களும்**

- ✓ இலக்கணத்தின் இன்றியமையாமையை அறிதல்
- ✓ முறையான இலக்கண அறிவு பெறுதல்
- ✓ திருத்தமாகப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் அறிதல்
- ✓ மொழியின் சிறப்பியல்புகளை உணர்ந்து போற்றுதல்
- ✓ இலக்கணத்தில் ஈடுபாடு பெறுதல்
- ✓ கவிதை, பாடல், பா வகைகள் புனையும் திறன் பெறுதல்
- ✓ மொழியாக்கத்திறன் மேம்படல்

**துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்களும் திறன்களும்**

- ✓ படித்துப் பொருள் உணர்தல்
- ✓ விருப்பமுடன் படித்தல், தேடிக் கற்றல்
- ✓ அகன்ற படிப்பிற்குப் பழகுதல்
- ✓ அகன்ற படிப்பிற்கும் ஆழ்ந்த படிப்பிற்கும் உள்ள வேறுபாட்டினை உணர்தல்
- ✓ நிறைந்த சொற்களஞ்சியம் பெறுதல்
- ✓ பத்தியைப் படித்துப் பொருளுணர்தல்
- ✓ தகவல் அறிவு பெறுதல்
- ✓ ஆர்வத்துடன் படித்தல் மற்றும் படித்தலைப் பகிர்தல்
- ✓ அகராதியைப் பயன்படுத்தும் ஆற்றல் பெறுதல்
- ✓ உயர்நிலைச் சிந்தனைத் திறன்கள் பெறுதல்
- ✓ கதை, துணுக்குகள், செய்திக்கோவை, பயணக்கட்டுரை போன்ற படைப்புகளைப் படைக்கும் திறன் பெறுதல்

**மொழிவழி வளர்க்கப்படும் பயன்பாட்டுத் திறன்கள்**

எழுத்துகளை, சொற்களை, தொடர்களை வரிசைப்படுத்தி வகைப்படுத்தும் திறன், அகராதியில் சொல் தேடலுக்கும், பொருள் அறிதலுக்கும், சொற்களை இலக்கிய, இலக்கண அடிப்படையில் பிரித்து அகராதி உருவாக்கலுக்கும் அகர வரிசைப்படுத்தும் திறன் அடிப்படையாக அமைவதால் மாணவர் வகுப்பு நிலைக்கேற்ப வளர்நிலையில் **அகராதியைப் பயன்படுத்தும் திறன்** அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழியின் தொடர் அமைப்பை ஆழ அறிதலுக்கும் பிற மொழியோடு ஒப்பிட்டுப் புரிந்துகொள்வதற்கும் மொழியைப் பகுத்து உணர்வதற்கும் மொழிபெயர்ப்புத் திறன் இன்றியமையாதது. சொல் மொழிபெயர்த்தலில் தொடங்கி தொடர், சிறுபத்தி எனப் படிப்படியாக மாணவர்கள் மொழிபெயர்க்கும் திறனைப் பெறும் வகையில் **மொழிபெயர்ப்பு செய்யும் திறன்** அளிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தகவல் உலகில், இதழியல் துறையில் தமிழறிந்த மாணவர்கள் வேலைவாய்ப்புகளை பெறும்வகையில் பிழைத்திருத்தம் மற்றும் தொகுத்தல் பணிகளை மேற்கொள்ள ஏற்றவாறு மெய்ப்புத்திருத்தலுக்கான அடித்தளத்தினை அமைக்க **பிழை களைதல் திறன்** அளிக்கப்பட்டுள்ளது.

**மொழிப்பாடத்தின்வழி அளிக்கப்படும் விழுமியங்கள்**

தமிழ்மொழிவழியே திறன்கள் மட்டுமல்லாது, தமிழர் வாழ்வியலும், சார்ந்த பண்பாட்டுக் கூறுகளும் தொன்மையும் இனிமையும் செம்மையும் செறிவும் மாணவரைச் சென்றடைகின்றன. தமிழ்மொழி அறநெறியையும் அன்பின் விளைவையும் நட்பையும் நேர்மையையும் கொடையையும் நடுவுநிலைமையையும் பன்னெடுங்காலமாக இலக்கியங்கள் வாயிலாக உணர்த்தி வருகின்றன. மொழிப்பாடத்தில் இலக்கியங்களை மாணவர்களுக்குக் கற்பிக்கையில் அவை சார்ந்த விழுமியங்களை உணரச்செய்வது, இன்றைய வளரிளம் பருவத் தலைமுறையினருக்குக் குறிப்பாக உயர்நிலையில் கல்வி பெறும் மாணவருக்கு இன்றியமையாத் தேவையாகும்.

இலக்கியங்கள்வழி வாழ்வியல் திறன்கள் என்னும் பண்பியல் திறன்களும் நோக்குதலுக்கு உள்ளாகின்றன. தமிழ்மொழிப் பாடத்தைக் கற்பதனால் மாணவர், மொழியைத் திறம்படக் கையாளவும் தன்னம்பிக்கையுடன் வாழ்வை எதிர்கொள்ளவும் பயன்படுத்தும் மொழியின் பெருமையை, வரலாற்றுத் தொன்மையை உணர்ந்து பெருமிதத்துடன் பயன்படுத்தவுமான திறன்களைப் பெறவேண்டும் என்னும் உயரிய நோக்கங்களைக் கொண்டு கீழ்க்காண் பொருண்மைகள் அடிப்படையில் உயர்நிலைத் தமிழ்மொழிப் பாடத்திட்டம் வடிவமைக்கப்படுகிறது.

**<u>பொருண்மைகள்</u>**

1. மொழி
2. நாடு/சமூகம்
3. அரசு/நிருவாகம்
4. இயற்கை, சுற்றுச்சூழல்
5. தொழில் / வணிகம்
6. கலை / கல்வி
7. நாகரிகம் / பண்பாடு
8. அறிவியல் / தொழில்நுட்பம்
9. அறம் / தத்துவம் / சிந்தனை
10. மனிதம் / ஆளுமை
11. அழகியல் / புதுமைகள்

இதன்படி, மாணவர் தெரிந்து கொள்ள வேண்டிய அடிப்படைச் செய்திகள் 1 முதல் 5 வகுப்புகளிலும் (தொடக்க நிலை) அவ்வடிப்டைச் செய்திகள் குறித்த வகைபாடுகள், விளக்கங்கள், அவற்றின் வாயிலாக மாணவர் பெற வேண்டிய விழுமியங்கள் போன்றவை 6 முதல் 8 வகுப்புகளிலும் (உயர் தொடக்க நிலை) செய்திகளின் ஆழம் ஒன்பது மற்றும் பத்து வகுப்புகளிலும் (உயர்நிலை) அறிந்து கொண்ட செய்திகளை/கருத்துகளை அலசி ஆராய்தல், திறனாய்தல், அவை குறித்து விரிவாகச் சிந்தித்தல், படைப்புத் திறனை மேம்படுத்தல், 11 மற்றும் 12 - பொதுத்தமிழ் வகுப்புகளிலும் (மேனிலை) மொழியைப் பயன்பாட்டு அடிப்படையில் மாணவர்களுக்குக் கொண்டு செல்லுதல், 11 மற்றும் 12 -சிறப்புத்தமிழ் வகுப்புகளிலும் (மேனிலை) கட்டமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பொருண்மையும் ஓர் அலகாக வைக்கப்பட்டு. அதனுள் செய்யுள், உரைநடை, துணைப்பாடம் மற்றும் இலக்கணப் பகுதிகள் இடம்பெறும். செய்யுள் பகுதியில் பழங்கால, இடைக்கால இலக்கிய வடிவங்களும் சமகால இலக்கிய வடிவங்களும் பொருண்மைக்குப் பொருத்தமுற அமையும். பொருண்மைக்கேற்ற உரைநடைப்பகுதி, வேறுபட்ட வடிவங்களுடன் நான்கைந்து பக்கங்களுக்கு மிகாமல் அமையும். துணைப்பாடப்பகுதி, பெரும்பான்மை படைப்பாளிகளின் படைப்புகளாக ஐந்து முதல் எட்டு பக்கங்களுக்குள் அமையும். வரையறுக்கப்பட்ட மரபிலக்கணப்பகுதிகள் பாடப்பகுதிகளின் துணைகொண்டு மாணவர்களுக்குப் புரியும்வகையில் விளக்கப்படும். மேலும், இப்பொருண்மைகள் அடிப்படையிலான பாடப்பகுதிகள் அறிதல், புரிதல், பயன்படுத்தல், ஆளுதல் ஆகிய மதிப்பீட்டுக் கூறுகளின்படி கீழ்க்காண் கற்றல் விளைவுகளை மாணவர்களுக்குள் ஏற்படுத்தும்.

**பாடப்பகுதிகளும் கற்றல் விளைவுகளும் (ஒன்பதாம் வகுப்பு)**

| பொருண்மை | பாடப்பொருள் (மாதிரி) | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|
| மொழி | **செய்யுள்**<br>தமிழ்மொழியின் தொன்மைச் சிறப்பை உணர்த்தும் கவிதைகள்<br>**உரைநடை**<br>திராவிட மொழிக் குடும்பம்/ மொழியின் அமைப்பு பற்றிய கட்டுரைப் பகுதி<br>**துணைப்பாடம்**<br>சொற்பொருள் மாற்றம் குறித்த உரையாடல் / நேர்காணல் | • தமிழ் மொழியின் தனித்தன்மை, இனிமையை உணர்ந்து கற்பர்.<br>• செய்யுளின் அருஞ்சொற்களுக்குத் தானே அகராதி பார்த்து பொருளறிவர்.<br>• கவிதைகளைப் படைக்கும் திறனை வளர்த்துக் கொள்வர்.<br>• தமிழ் மொழியின் தனிச்சிறப்புகளை பிற திராவிட மொழிகளுடன் ஒப்பிட்டு அறிவர்<br>• சொற்பொருள் மாற்றத்தை அறிந்து எழுத்தில் பயன்படுத்தும் திறனைப்பெறுவர்<br>• நேர்காணலில் வினாத்தொடுத்தல் முறையையும் உரையாடலின் அமைப்பு முறையையும் அறிந்து கொள்வர். |
| நாடு / சமூகம் | **செய்யுள்**<br>பண்டைய மன்னர்களின் ஆட்சித் திறத்தை விவரிக்கும் இலக்கியப் பாடல்கள்/சமூகம் பற்றிய புதுக்கவிதை<br>**உரைநடை**<br>பண்டைத் தமிழகத்தை ஆட்சிபுரிந்த பேரரசுகள் (அ) காலனி ஆதிக்க காலத் தமிழ்ச்சமூகம் குறித்த உரைப்பகுதிகள்<br>**துணைப்பாடம்**<br>வருணனைப்பகுதி/<br>ஓரங்க நாடகம் | • இலக்கியப் பாடல்களை உரிய ஓசைநயம் மாறாது படித்துச் சுவைக்கும் ஆற்றல் பெறுவர்<br>• வருணனைகளைக் காட்சிப்படுத்தும் இலக்கியப் பாடல்களைச் சுவைத்து மகிழ்வர்<br>• பண்டைய மன்னர்களின் போர்த்திறம், நீதி வழுவா முறை, அயல்நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத்தொடர்பு போன்றவற்றை இலக்கியச் சான்றுகளின்வழித் தெரிந்து கொள்வதுடன் இன்றைய சமூக வாழ்க்கையுடன் ஒப்பிட்டு உணர்வர்<br>• மொழி வளத்தினை இலக்கியங்கள்வழி உணர்ந்து கற்பர்<br>• நூல்களைத் தேடிப்பயிலும் ஆர்வத்தைப் பெறுவர்<br>• தொடர் அமைப்பு முறைகளைப் புரிந்து கொள்வதன் வாயிலாகப் பல்வேறு மொழிநடை அமைப்புகளை அறியவும் பயன்படுத்தவும் முயல்வர் |

| பொருண்மை | பாடப்பொருள்(மாதிரி) | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|
| அரசு / நிருவாகம் | **செய்யுள்**<br>பாடல்கள் / சமகாலக் கவிதை வடிவங்கள்<br>திருக்குறள் - அரசியல்<br>**உரைநடை**<br>காப்பியக் கருத்துகள் அடங்கிய உரைப்பகுதி<br>**துணைப்பாடம்**<br>மேலாண்மை / நிருவாகம் குறித்த கல்வெட்டுகளின் சான்றாதாரங்கள் | • செய்யுளில் இடம்பெற்றுள்ள சொற்களின் சிறப்பையும் பொருளையும் அறிந்து பயன்படுத்தும் ஆற்றல் பெறுவர்<br>• பழங்கால நிருவாக / மேலாண்மை முறைகளை அறிவதன் வாயிலாகத் தமிழர்கள் குறித்த பெருமித உணர்வைப் பெறுவர்<br>• நிருவாக, மேலாண்மை ஆட்சிமுறைகளை ஒப்பிட்டு உணர்வர்<br>• பழங்காலக் கோயில் நிருவாகம், நீர் நிருவாகம், விளைநிலங்களை நிருவகித்த முறை குறித்த அறிவைக் கல்வெட்டுச் செய்திகளின்வழிப் பெறுவர்<br>• கல்வெட்டு ஆராய்ச்சிகள் குறித்த ஆக்க மனப்பான்மைப் பெறுவர்<br>• தமிழர்களின் எண்ணறிவையும் பயன்பாட்டு நுட்பத்தினையும் அறியும் திறன் பெறவர் |
| இயற்கை / சுற்றுச்சூழல் | **செய்யுள்**<br>சுற்றுச் சூழலை மையப்படுத்திய சங்க இலக்கியப் பாடல்கள் / புதுக்கவிதை<br>**உரைநடை**<br>அலையாத்திக் காடுகள் பற்றிய அறிவியல் கட்டுரை / நீரின்றி அமையாது உலகு<br>**துணைப்பாடம்**<br>நிலா / மழை / ஞாயிறு குறித்த கால வாரியான பாடல்கள் (தொகுப்பு) / வழக்காடு மன்றம் | • மக்களின் வாழ்வாதாரம் இயற்கையைச் சார்ந்துள்ளமையை உணர்ந்து இயற்கைச் சூழலைப் பாதுகாக்கத் தம் பங்கினை அளிப்பர்<br>• கட்டுரை அமைப்பு அறிந்து கட்டுரை படைக்கும் திறன் பெறுவர்<br>• கட்டுரைப் பகுதிகள் எவ்வாறு அமையும் என்பதையும் பல்வேறு கட்டுரைக் கூறுகள் குறித்த அறிவையும் பெறுவர்<br>• இயற்கையின் அழகை, ஆற்றலை கவிதைகள் வழி உணர்வர்<br>• கவிதைகளை விருப்பமுடன் தாமே தேடிக் கற்பர்<br>• புதுக்கவிதை படைக்கும் திறன் பெறுவர் |
| தொழில் / வணிகம் | **செய்யுள்**<br>வேளாண்மைத் தொழிலை மையப்படுத்திய நாட்டுப்புறப் பாடல்கள் / திருக்குறள்<br>**உரைநடை**<br>சங்க இலக்கிய வணிகம் குறித்த பாடல்கள்<br>தமிழர் தொழில் குறித்து விவரிக்கும்<br>கட்டுரைப் பகுதிகள் / பழந்தமிழ் வணிகம் - கட்டுரை<br>**துணைப்பாடம்**<br>உழவர் சிக்கல் பற்றிய சிறகதை | • வேளாண்மைத் தொழிலின் சிறப்பிணை இலக்கியங்கள் வாயிலாகத் தெரிந்து கொண்டு இன்றைய நிலையில் அதனை மேம்படுத்த வேண்டிய முயற்சிகள் குறித்துச் சிந்திக்கும் திறனை வளர்த்துக் கொள்வர்<br>• தமிழகத்தில் நடைபெறும் முக்கிய வேளாண் தொழில்கள் பற்றியும் அவை நடைபெறும் இடங்கள் குறித்த அறிவினைப் பெறுவர்<br>• வேளாண்மை குறித்த திருக்குறள் கருத்துகளைப் புரிந்து எடுத்துரைக்கும் திறன் பெறுவர்<br>• தங்கள் பகுதியில் நடைபெறும் வேளாண் தொழிலை விளக்கி வகுப்பறையில் பேசிக் கலந்துரையாடும் பாங்கைப் பெறுவர்<br>• வேளாண்மை குறித்து வழங்கப்படும் பழமொழிகளைப் தொகுக்கும் ஆற்றல் பெறுவர்<br>• பழந்தமிழ் வணிகம் குறித்த அறிவைப் பெறுவர்<br>• சிறுகதைகளைப் படித்துச் சுவைப்பர் |

| பொருண்மை | பாடப்பொருள்(மாதிரி) | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|
| கலை / கல்வி | **செய்யுள்**<br>திருக்குறள் / புறநானூறு / ஏலாதி<br>திரையிசைப்பாடல் (அ)<br>ஓவியத்தை விவரிக்கும் கவிதை / துளிப்பாக்கள்<br>**உரைநடை**<br>பெண் கல்வி (அ) நாட்டுப்பு இசைக் கருவிகள் (அ) இசை மூவர்<br>**துணைப்பாடம்**<br>வீதி நாடகம் / வாழ்க்கை வரலாறு | • தமிழகக் கலைகளின் நுண்பண்புகளை அறிந்து வியப்புக்குள்ளாவர்<br>• தமிழகக் கலைகளைக் குறித்த வரலாற்று அறிவைப் பெறுவர்<br>• ஓவியங்கள் மூலம் அவை படைக்கப்பட்ட காலத்தை அறிந்து மொழியின்பாலும் மொழிவழங்கும் சமூகத்தின்பாலும் பெருமிதம் கொள்வர்<br>• எதுகை மோனை நயங்களைப் பயன்படுத்தி இருவரி கவிதைகளை எழுதுவர்.<br>• பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்வர்<br>• நாட்டுப்புற இசைக்கருவிகள் குறித்த அறிவைப் பெறுவர்.<br>• கலை, கல்வித்துறையில் புகழ் பெற்றவர்கள் குறித்து கட்டுரை எழுதும் திறன் பெறுவர்.<br>• உரைப் பகுதியை நாடகமாக மாற்றி எழுதும் திறன் கிடைக்கப் பெறுவர். |
| நாகரிகம் / பண்பாடு | **செய்யுள்**<br>திருக்குறள் / நற்றிணை<br>கார் நாற்பது / கலித்தொகை<br>**உரைநடை**<br>தமிழர் திருவிழாக்கள்<br>ஏறு தழுவுதல் / அகழாய்வுகள்<br>தமிழ் உணவு - கட்டுரை<br>**துணைப்பாடம்**<br>பழந்தமிழ் வழிபாட்டு மரபுகள் / பயண இலக்கியம் | • இலக்கியம் வாயிலாகத் தமிழர்களின் வழிபாடு, பழக்க வழக்கங்கள், சமூக வாழ்க்கைமுறை குறித்த செய்திகளை அறிந்து வியப்பர்.<br>• தமிழ்மொழி சமூகத்தோடும் பண்பாட்டோடும் இணைந்துள்ளமையை உணர்ந்து கற்பர்.<br>• தமிழர் விழாக்கள் குறித்த அறிவையும் விழாக்களின் தேவை மற்றும் சமூக ஒருங்கிணைவையும் உணர்ந்து கற்பர்.<br>• பழந்தமிழரின் உணவுமுறைகள் பற்றிய அறிவைப் பெறுவதுடன் பின்பற்றும் ஆற்றலைப் பெறுவர்.<br>• மரபின் தொடர்ச்சி மொழியில் படிந்துள்ளமையை உணர்ந்து மொழியைப் பயில்வர்<br>• மொழி என்பது சமூகப் பண்பாட்டின் பகுதி என்பதை அறிவர்.<br>• வழிபாட்டு மரபுகளை மொழிவழி / இலக்கியங்கள் வழி அறிவர். |

| பொருண்மை | பாடப்பொருள்(மாதிரி) | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|
| அறிவியல் / தொழில் நுட்பம் | **செய்யுள்**<br>திருக்குறள் / தொல்காப்பிய நூற்பாக்கள் / அறிவியல் சார்ந்த பழங்கால, சமகாலக் கவிதைகள்<br>**உரைநடை**<br>திருக்குறளில் அறிவியல் / சங்ககாலத் தொழில்நுட்பங்கள் / தமிழர் தொழில் நுட்ப அறிவு<br>**துணைப்பாடம்**<br>வானியல் குறித்த படைப்பு (அ) அறிவியல் புனைகதை (அ) நேர்காணல் | • தமிழரின் தொழில்நுட்பம் பற்றி அறிந்து இன்றைய நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் திறன் பெறவர்<br>• திருக்குறள் கூறும் அறிவியல் செய்திகளை அறிவர்<br>• புதுக்கவிதைகளின் வழி அறிவியல் கருத்துகளைத் தானே அறியும் திறன் பெறுவர்.<br>• அறிவியல் கலைச்சொற்கள் அறிந்து பயன்படுத்தும் ஆற்றல் பெறுவர்.<br>• புனைகதைகளைப் படித்துச் சுவைக்கும் திறன் பெறவர். |
| அறம் / தத்துவம் / சிந்தனை | **செய்யுள்**<br>திருக்குறள் கவிதைகள் / சித்தர் பாடல்கள்<br>**உரைநடை**<br>**பல்வேறு சமயநூல்கள் காட்டும் தத்துவ மரபு**<br>**துணைப்பாடம்**<br>**தத்துவ நாடகம் / சொல்லாடல் மன்றம்** | • மொழி வாயிலாக தத்துவ நெறிமுறைகளை அறிந்து கொள்வர்.<br>• சித்தர்களின் பாடல்வழி தத்துவம் பற்றிய அறிவை பெறுவர்.<br>• திருக்குறளின் வழி அறம் பற்றிய செய்தில் பற்றித் தெரிந்து கொள்வர்.<br>• ஐஞ்சிறு காப்பியங்கள் காட்டும் எளிய தத்துவச் செய்திகள் பற்றித் தெரிந்து கொள்வர்.<br>• மதம் சார்ந்த அறக் கருத்துகளை அறிந்து வாழ்வில் பின்பற்றுவர்.<br>• சமயங்கள், இலக்கியங்கள் வழி செய்த தமிழ்த் தொண்டினை அறிந்து கொள்வர்.<br>• இலக்கியங்கள் காட்டும் தமிழர் சிந்தனை மரபுகளை அறிந்து கொள்வர்<br>• எளிய தத்துவக் கருத்துகளை அறிந்து கொள்வர்.<br>• நாடக அமைப்பு முறையை அறிவர்.<br>• தாமே நாடகம் அமைக்கும் திறன் பெறுவர். |

| பொருண்மை | பாடப்பொருள்(மாதிரி) | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|
| மனிதம் / ஆளுமை | **செய்யுள**<br>**காப்பியம் / மனிதநேயம் குறித்த புதுக்கவிதை**<br>**உரைநடை**<br>பேரிடர்களின்போது எழுதப்பட்ட நிகழ்வுத் தொகுப்பு / விவரிப்புக் கட்டுரை / தலையங்கக் கட்டுரை<br>**துணைப்பாடம்**<br>சிறுகதை / உரையாடல் / ஆளுமை - நேர்காணல் | • மனிதநேயம் குறித்த பண்பு நலன்களைத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாகப் பெற்றுத் தம் வாழ்வில் பின்பற்றுவர்.<br>• காப்பியம் காட்டும் ஆளுமைகளை அறிவர்.<br>• இடர்க் காலங்களில் மனிதர்களுக்குள் துளிர்க்கும் மனிதத்தை அறிவர்.<br>• பேரிடர்க் காலங்களில் கொடுக்கப்படும் விழிப்புணர்வு அறிவிப்புகளைப் பின்பற்றுவதும் கடைப்பிடிக்க அறிவுறுத்துவதும் இன்றியமையாதவை என்ற அறிவைப் பெறுவர்.<br>• ஆளுமைகள் வாயிலாகப் பெறும் மனிதப் பண்புகள் குறித்துச் சொல்லாடல் திறன் பெறுவர்.<br>• சிறுகதைகளைப் படித்து மையக் கருத்தைப் அறியும் திறனைப் பெறுவர். |
| அழகியல் / புதுமைகள் | **செய்யுள்**<br>ஆற்றுப்படை நூல்கள் / சமகாலக் கவிதை<br>**உரைநடை**<br>மொழி அமைப்பியல் குறித்த கட்டுரை<br>துணைப்பாடம்<br>சிறுகதை / புதினத்தின் ஒரு பகுதி | • தமிழ் இலக்கியத்தின் பண்டைய தகவல் பரிமாற்ற முறையை ஆற்றுப்படை நூல்கள் வாயிலாக அறிந்து கொள்வர்.<br>• ஆற்றுப்படை நூல்கள் கூறும் அழகியல் கருத்துகளை உணர்வர்.<br>• பகிர்ந்து வாழும் பண்டையச் சமூக அமைப்பை இலக்கியங்கள் வழி அறிவர்.<br>• தமிழ் மொழியின் அமைப்பைப் பற்றித் தெரிந்து பயன்படுத்துவர்.<br>• மொழி நடை, மொழி இனிமை குறித்த அறிவைப் பெறுவர்.<br>• மொழியின் இலக்கண அமைப்பை, எழுத்துகளின் அறிவியல் கட்டமைப்பை அறிவர்.<br>• சிறுகதைகள் மூலம் புதுமைக் கருத்துகளைப் பெறுவர்.<br>• சிறுகதைகளைப் படைக்கும் ஆற்றல் பெறுவர். |

**பாடப்பகுதிகளும் கற்றல் விளைவுகளும் (பத்தாம் வகுப்பு)**

| பொருண்மை | பாடப்பொருள் (மாதிரி) | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|
| மொழி | **செய்யுள்**<br>மொழிச் சிறப்பை உணர்த்தும் மரபுக் கவிதைகள் / புதுக்கவிதைகள்<br>**உரைநடை**<br>உரைநடை வரலாறு / கிளைமொழி வரலாறு குறித்த கட்டுரைப் பகுதிகள்<br>**துணைப்பாடம்**<br>உரைநடை நயம் உணர்த்தும் இலக்கியப் பகுதிகள் | • தமிழ்மொழியின் இலக்கியங்கள்வழி உணர்ந்து அறிவர்<br>• மயங்கொலிச் சொற்களின் பொருள் வேறுபாடறிந்து பயன்படுத்த அறிவர்<br>• அகர வரிசைப்படுத்தும் திறனைப் படைப்புத்திறன் வாயிலாக வெளிப்படுத்த முயல்வர்<br>• திராவிட மொழிகளுள் தமிழ் மூலமொழி என்பதையும் அதிலிருந்து பிறந்த பிற கிளைமொழிகள் எவை என்பதையும் தெரிந்து கொள்வர்<br>• தமிழ்மொழிக் கட்டமைப்பை பிற மொழிகளுடன் ஒப்பிட்டு உணர்த்தும் வாய்ப்பு பெறுவர்<br>• உரைப் பகுதியிலுள்ள நயங்களை உள்வாங்கிக் கொண்டு நயம் வெளிப்பட எழுதும் திறன் பெறுவர்<br>• தமிழ்மொழியின் சிறப்பு குறித்து உரையாற்றும் ஆற்றல் உடையவராவர் |

| பொருண்மை | பாடப்பொருள் (மாதிரி) | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|
| நாடு / சமூகம் | **செய்யுள்**<br><br>தமிழகத்தை ஆண்ட சிற்றரசர்கள் பற்றிய குறிப்புகளை விளக்கும் சங்க இலக்கியப் பாடல்கள் - எட்டுத்தொகை / பத்துப்பாட்டு புதுக்கவிதைகள் / திருக்குறள்<br><br>**உரைநடை**<br><br>காப்பியம் காட்டும் சமுதாயம் / தமிழ்க்கவிதைகளில் சமூகம்<br><br>**துணைப்பாடம்**<br><br>வரலாற்று நாடகம் | • இலக்கியப் பாடலின் பொருளை உரைநடைப்படுத்திக் கூறும் திறன் உடையவராவர்<br>• சிற்றரசுகள் ஆண்ட நிலப்பகுதி, சிற்றரசுகள் பேரரசுகளுடன் கொண்டிருந்த நட்புறவு முதலான செய்திகளைத் தெரிந்துகொண்டு நாம் வாழும்பகுதி எத்தகைய சிறப்பினைப் பெற்றுள்ளதென்பதை அறிவர்<br>• கருத்தைச் சுவைபட வருணித்து எழுதும் திறனைப் பெறுவர்<br>• பாடப்பகுதியிலுள்ள இணைப்புச்சொற்களை அறிந்து தம் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்<br>• இலக்கியக் கதை மாந்தர்களை முன்னிலைப்படுத்தி நடிக்கும் திறன் பெறுவர் |
| அரசு / நிருவாகம் | **செய்யுள்**<br><br>சங்க இலக்கியப் பாடல்கள்<br><br>**உரைநடை**<br><br>இலக்கியப் பாடல்கள் வெளிப்படுத்தும் ஆட்சி முறை / நிருவாகக் கோட்பாடுகள் குறித்த கருத்துக்கோவை<br><br>**துணைப்பாடம்**<br><br>சிறுகதை | • சங்க இலக்கியம் காட்டும் சமூகத்தைப் பாடல் கருத்தின்வழிப் புரிந்து கொள்வர்<br>• இலக்கியச் சொற்களின் பொருள் சிறப்பினை உணர்நது பயன்படுத்தும் ஆற்றல் பெறுவர்<br>• ஆட்சியாளரின் கடமை, பொறுப்புகளைத் தெரிந்து கொள்வதுடன் நல்ல குடிமகனுக்குரிய பண்புநலன்களைப் பின்பற்றிக் திறன் பெறுவர்<br>• வரிவிதித்தல், ஆட்சிமுறை முதலிய நிருவாக முறை குறித்த செய்திகளை இலக்கியங்கள் வழி அறிவர்<br>• இலக்கியங்கள், எழுதப்பட்ட காலத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடியாக விளக்கும் திறத்தைப் புரிந்து கற்பர்<br>• குறிப்புகளைக் கொண்டு செய்தியை விவரித்துக் கதை எழுதும் திறன் பெறுவர் |
| இயற்கை / சுற்றுச்சூழல் | **செய்யுள்**<br><br>ஐவகை நில அமைப்பினை<br><br>மையப்படுத்திய இலக்கியப் பாடல்கள் / புதுக்கவிதைகள்<br><br>**உரைநடை**<br><br>இயற்கையோடு இயைந்த வாழ்வு - கட்டுரை<br><br>**துணைப்பாடம்**<br><br>சிறுகதை / நேர்காணல் | • மக்களின் வாழ்வு இயற்கையுடன் இயைந்தது என்பதை ஐவகை நிலத்துடன் பொருத்தி உணர்வர்<br>• பழந்தமிழர் இயற்கையை இறைவனாகப் போற்றி வணங்கிய செய்திகளை அறிவர்<br>• இலக்கியப் பாடல்கள் உணர்த்தும் இணைத் உவமை, உருவக நலன்களைப் புரிந்துகொண்டு பேச்சாற்றல் திறனை வளர்த்துக் கொள்வர்<br>• பாடப்பகுதியில் இடம்பெறும் வருணனைகளை விளக்கி எடுத்துரைக்கும் ஆற்றல் பெறுவர்<br>• ஐவகை நில அமைப்பை இன்றைய சூழலுடன் ஒப்பிடும் திறன் பெறுவர்<br>• உரைநடை வாயிலாக தொடர்புகளை வகைப்படுத்தும் திறன் பெறுவர்<br>• படைப்புகளின்வழி வெளிப்படும் படைப்பாளரின் மொழி ஆளுமையை உணர்ந்து படைப்பை அணுகும் திறன் பெறுவர் |
| தொழில் / வணிகம் | **செய்யுள்**<br><br>வேளாண்மை குறித்த இலக்கியப் பாடல்கள்<br><br>**உரைநடை**<br><br>வேளாண்மை வணிக வாரியங்கள் குறித்த செய்திகளின் தொகுப்பு - கட்டுரை<br><br>**துணைப்பாடம்**<br><br>நேர்காணல் | • பண்டைய தமிழர்கள் பின்பற்றிய வேளாண் தொழில் குறித்த செய்திகளை இலக்கியம் வாயிலாக அறிவர்<br>• நெல்வகை, மீன்வகை குறித்து இலக்கியங்கள் காட்டும் செய்திகளை அறிவர்<br>• வேளாண் வளர்ச்சிக்காகத் தமிழகம் எடுத்துள்ள செயல்திட்டங்கள் குறித்த அறிவைப் பெறுவர்<br>• வேளாண்மை சார்ந்த பிற தொழில்கள் குறித்த அறிவைப் பெறுவர்<br>• வேளாண் வணிகத்தைத் தற்கால வணிகத்துடன் தொடர்புபடுத்தும் அறிவைப் பெறுவர்<br>• கட்டுரை வாயிலாக வணிகம் பற்றிய வகைமைகளைத் தெரிந்து கொள்வர் |

| பொருண்மை | பாடப்பொருள் (மாதிரி) | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|
| கலை / கல்வி | **செய்யுள்**<br>புறநானூறு (அ)<br>பொருநராற்றுப்படை ஔவையார் தனிப்பாடல் / சமயப் பாடல்கள்<br>**உரைநடை**<br>தமிழகத்தில் கல்வி வளர்ச்சி பற்றிய கட்டுரை / நிகழ்த்துகலைகள் குறித்த கட்டுரை (அ) விமரிசனக் கட்டுரை<br>**துணைப்பாடம்**<br>சுதந்திரப் போராட்ட கால இதழியல் | • கலைகள் குறித்தும் கல்வி குறித்தும் இலக்கியங்கள் வாயிலாக, அந்நாள், இந்நாள் படைப்பளர்களின் கருத்துகளைத் தெரிந்து கொள்வர்<br>• மேலும், இதன்வழி படைப்பு எழுதப்பட்ட காலத்தின் கலை மற்றும் கல்வி பற்றிய கருத்தாக்கங்களை உணர்வர்<br>• ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னால் தமிழகக் கல்வியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்களை அறிந்து கொள்வர்<br>• கடிதங்களின் வகையறிந்து பல்வேறு தலைப்பில் விண்ணப்பங்கள் எழுதும் பயிற்சி பெறுவர்<br>• நிகழ்த்துகலைகள் மூலம் கலை மற்றும் கல்விக்கூறுகளை அறிந்து கொள்வர்<br>• விமர்சனங்களைப் பேச்சிலும், எழுத்திலும் அமைக்கும் திறன் பெறுவர்<br>• சமூக மாற்றத்தில் இதழ்களின் பங்களிப்பினை அறிந்துக் கொள்வர் |
| நாகரிகம் / பண்பாடு | **செய்யுள்**<br>சிலப்பதிகாரம் / திருக்குறள் / நாலடியார் தனிப்பாடல்கள்<br>**உரைநடை**<br>தன் வரலாறு / விருந்தோம்பல் குறித்த உரைநடைப் பகுதிகள்<br>**துணைப்பாடம்**<br>நடுகல் வழிபாடு | • தமிழ் இலக்கியப் பாடல்கள் வெளிப்டுத்தும் விருந்தோம்பல் பண்புகளைப் பற்றி அறிவர்<br>• மறத்திலும் அறம் போற்றுபவர் நம் தமிழர்கள் என்பதை அறிந்து அதன்படி நடப்பர்<br>• தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை அறிந்து கொள்வர்<br>• தமிழரின் நாகரிகம், பண்பாடு ஆகியன பற்றி பண்டைய மற்றும் நாட்டுப்புற இலக்கியங்கள்வழி அறிந்து கொள்வர்<br>• நடுகல் வழிபாடு, சிறு தெய்வங்கள் வழிபாடு பற்றிய அறிவைப் பெறுவர் |
| அறிவியல் தொழில்நுட்பம் | **செய்யுள்**<br>சங்க இலக்கியம் / இடைக்கால இலக்கியம் / சமகால இலக்கியம்<br>**உரைநடை**<br>கப்பல் கட்டும் கலை / கணினித் தமிழ்<br>**துணைப்பாடம்**<br>அறிவியல் ஆய்வுக் கட்டுரை / புனைகதை | • தமிழகக் கட்டடக்கலையின் நுட்பங்களை ஆராய்ந்து பிற கட்டடக் கலையுடன் ஒப்பிடுவர்<br>• தற்காலத் தமிழ் வளர்ச்சியை முற்காலத் தமிழுடன் ஒப்பிடும் அறிவைப் பெறுவர்<br>• பழந்தமிழரின் அறிவியல் தொழில்நுட்பத் திறன் குறித்து அறிவர்<br>• கணினியில் தமிழ் பயன்படும் முறையை அறிந்து கொள்வர்<br>• தமிழில் வழங்கும் புதிய அறிவியல் செய்திகைள அறிந்து கொள்வர்<br>• கலைச்சொல்லாக்கம் குறித்து அறிவர் |
| அறம் / தத்துவம் / சிந்தனை | **செய்யுள்**<br>எட்டுத்தொகை / பத்துப்பாட்டு / சித்தர் (அ) மாணிக்கவாசகர் பாடல் / புதுக்கவிதை<br>**உரைநடை**<br>தமிழர் அறிவுக் கோட்பாடு / தமிழர் தத்துவம் – கட்டுரை<br>**துணைப்பாடம்**<br>திருக்குறளும் பிறமொழி இலக்கியங்களும் - ஒப்பீட்டு வடிவம் | • தமிழர்களின் அறச்சிந்தனையை அறிந்து பின்பற்றல்<br>• இலக்கியம் காட்டும் அறம் / தத்துவம் / சிந்தனைக் கருத்துகளை அறிந்து பின்பற்றுவர்<br>• கவிதைகளில் இடம்பெற்றுள்ள தத்துவச் சிந்தனைகளை அறிவர்<br>• தமிழர்களின் அறிவுக்களஞ்சியமான இலக்கியச் சிந்தனைக் கருத்துகளை அறிவர்<br>• குறிப்புகள் கொண்டு உரையாற்றும் திறனைப் பெறுவர்<br>• குறள் காட்டும் அறம், தத்துவம், சிந்தனைக் கூறுகளை உரையாடல் மூலம் அறிந்து கொள்வர்<br>• திருக்குறளை உலக இலக்கியங்களோடு ஒப்புமைப்படுத்தி அறிவர் |
| மனிதம் / ஆளுமை | **செய்யுள்**<br>திருக்குறள் / சீறாப்புராணம் / மூன்றாம் பாலினம் குறித்த நவீனக் கவிதைகள்<br>**உரைநடை**<br>தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய கட்டுரை (உரையாடல் / நேர்காணல்)<br>**துணைப்பாடம்**<br>ஆவணப்படம் குறித்த விமரிசனம் | • இலக்கியங்கள் வாயிலாக மனித நேயம் / ஆளுமை சார்ந்த கூறுகளை தெரிந்து கொள்வர்<br>• மூன்றாம் பாலினத்தவருடன் உள்ள பண்புகளை அறிந்து சமூகத்தில் மனிதமும் மாண்பையும் பின்பற்றல்<br>• மனிதம் சார்ந்த கூறுகளையும் மனிதவளத்தின் மாண்பையும் படைப்பின்வழி அறிந்து சார்ந்த விழுமியங்களைப் பெறுவர்<br>• விமர்சனக் கட்டுரை எழுதும் திறன் பெறுவர்<br>• ஆவணப்படங்களின் போக்குகளை உணர்வர் |

| பொருண்மை | பாடப்பொருள் (மாதிரி) | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|
| அழகியல் / புதுமைகள் | **செய்யுள்**<br><br>தற்காலக் கவிதைகள் – அழகியல் சார்ந்தவை / சமகாலக் கவிதை வடிவங்கள்<br><br>**உரைநடை**<br><br>தமிழர் அழகியல் / நவீனத்துவம் சார்ந்த கட்டுரைகள்<br><br>**துணைப்பாடம்**<br><br>புதுக்கவிதைகளுக்குப் பிந்தைய கவிதைகள் குறித்த உரையாடல் காலந்தோறும் - பட்டிமன்றம் | • பாடப்பகுதியில் உள்ள செய்யுளின் வடிவம், உள்ளடக்கம், உணர்ச்சி ஆகியனவற்றின் வெளியீட்டுத் தன்மையை அறிவர்<br>• இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய அடிப்படை அறிவு பெறுவர்<br>• முரண்களினால் கவிதைகள் பெறும் அழகினைப் படித்துச் சுவைப்பர் அதைப்போன்ற கவிதைகளைப் படைக்கும் ஆர்வமும் திறனும் பெறுவர்<br>• மரபு வழிக் கட்டுரை / நவீனத்துவக் கட்டுரை வேறுபாடுகளை அறிந்து கட்டுரை எழுதும் ஆற்றல் பெறுவர்<br>• வரவேற்பு மடல்களை எழுதும் ஆற்றல் பெறுவர்<br>• கட்டுரை படைக்கும் வல்லமை பெறுவர்<br>• கவிதையின் அழகியல் கூறுகளை இனங்கண்டு சுவைப்பர்<br>• இன்றைய கவிதை வகைகளின் தன்மையை அறிந்து கவிதை படைக்க முயல்வர் |

**உயர்நிலை வகுப்புகளுக்கான இலக்கணப்பகுதி**

| வ. எண். | 9-வகுப்பு | 10-ம் வகுப்பு |
|---|---|---|
| 1. | **வினை வகைகள்**<br><br>தன் வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை<br><br>துணைவினைகள் | **மொழிவகைகள்**<br>தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி |
| 2 | புணர்ச்சி - (எட்டாம் வகுப்பின் தொடர்ச்சி) | திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றின் வழு, வழா நிலை, வழுவமைதி |
| 3 | **இடைச்சொல், உரிச்சொல் விளக்கம்** | **சொல் உறுப்புகள்**<br>பதம்-பகுபத உறுப்புகள் விளக்கம் முன்னொட்டு, பின்னொட்டு |
| 4 | ஆகு பெயர் – எட்டாம் வகுப்பின் தொடர்ச்சி | தொடர் வகைகள்<br>தொகை நிலை, தொகா நிலை |
| 5 | **தொடர் இலக்கணம்**<br><br>எழுவாய், பயனிலை, செயப்படு பொருள், விளக்கம் | **பொருள்கோள்**<br>ஆற்றுநீர் கொண்டு கூட்டு நிரல்நிரை |
| 6 | வல்லினம் மிகு, மிகா இடங்கள் 1 | வல்லினம் மிகு மிகா இடங்கள் 2 |
| 7 | **பொருளிலக்கணம்**<br><br>அகம், புறம்<br><br>முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் அறிமுகம் | **பொருளிலக்கணம்**<br>புறப்பொருள் வெண்பாமாலை கூறும் பன்னிரு வகை புறத்திணைகள் |
| 8 | **பொருளிலக்கணம்**<br><br>தொல்காப்பியர் கூறும் எழுவகை புறத்திணைகள் | **பொருளிலக்கணம்**<br><br>திணை இலக்கணக் கூறுகளைச் செய்யுளில் இனங்காணுதல் |
| 9 | **யாப்பிலக்கணம்**<br><br>யாப்புறுப்புகள் 6<br><br>அலகிட்டு வாய்பாடு கூறுதல் | **யாப்பிலக்கணம்**<br>செய்யுள் வகைகள்<br>வெண்பா, ஆசிரியம், குறள் வெண்பா, அலகிட்டு வாய்பாடு கூறுதல் |
| 10 | **அணி இலக்கணம்**<br><br>உருவகம், பின்வருநிலை, வஞ்சப் புகழ்ச்சி | **அணி இலக்கணம்**<br>வேற்றுமை, பிறிது மொழிதல், வேற்றுப் பொருள் வைப்பு, படிமம், குறியீடு, முரண் |